உ

கணபதிதுணை.

தேவிசகாயம்.

கெங்கையம்மன்

நாடகாலங்காரம்.

இவை

வடவேங்கடமென்னுந் திருப்பதியில்

ஜனிததோங்கும்

கெங்கையம்மன் மீது

விழுப்புரம் தாலுகா விக்கிரவாண்டி சாலை

கிருஷ்ணப்பிள்ளையவர்களால்

இயற்றியதை

கோகுலாபுரம்

அருணாஜல முதலியாரால்

பார்வையிடப்பட்ட பிரதிக்கிணங்க

திருப்பதி

இரத்தினமுதலியார்

அண்டுஸன் அவர்களது

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காப்பிரைட்

காப்பி - 1000.

1915

இதன்விலை அணா-4.

நெ. 34. முத்துகிருஷ்ணன்தெரு, சென்னை.

AUG 1916 MADRAS

உ

கடவுள் துணை.

விளம்பரம்

இதனால் சகலமானபேர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்; அடியிற்கண்ட எமதிடத்தில் நானாவிதமான தமிழ், தெலுங்கு, துலுக்கு ஜோசியவைத்திய புத்தகங்களும் சில்லரை புத்தகங்களும் விலை சரசமாய் பெற்றுக்கொள்ளலாம்.

ஞானவெட்டியான் மூலமும்-உரையும்	2	8	0
வன்னியர்புராணம் மூலமும்-உரையும்	1	8	0
நாலுகாண்ட வைத்தியகாவியம் சூ௨௱	0	12	0
சோதிடச்சந்திரநாடி	0	12	0
இரணியநாடகம்	0	8	0
புஷ்பகாந்தி	0	8	0
சமத்காரசந்த்ரவதனி	0	6	0
இலக்ஷ்மணதேவி மாலையிடுநாடகம்	0	4	0
நூற்றெட்டுத் திருப்பதிகீர்த்தனை	0	4	0
மலையாள மாந்திரீக அரிச்சுவடி	0	4	0
கெருட கெர்வபங்க நாடகம்	0	4	0
சீமந்தினி கல்யாணநாடகம்	0	4	0
ஜெகஜாலப்புரட்டன் கதை	0	4	0

ஜெகன்மோஹன ஜாணகிராம் என்னும் ஓர்நாவல் கூடிய சிக்கிரம் வெளிவரும்.

இப்புத்தகம் வேண்டுபவர்கள் அடியிற் கண்ட விலாசத்தாரர்களுக் கெழுதி தருவித்துக் கொள்ளலாம்.

இப்படிக்கு

ஆர் வெங்கடேசமுதலியார்

நெ, 34 முத்துகிருஷ்ணன் வீதி,

மின்ட் பில்டிங் போஸ்டு மதராஸ்.

171392

உ

கடவுள் துணை.

தேவிசகாயம்

கெங்கையம்மன் நாடகம்.

விநாயகர்காப்பு

பாயிரம்.

விருத்தம்.

சீர்பரவுமுலகேத்துங்கைலைவாசன்
 செஞ்சடையிலிருந்தாடு கெங்கையம்மன்
பேர்பரவுஞ்சரித்திரத்தை யுலகந்தன்னிற்
 பேசரியநாடகமாய்ச் சொல்லவோர்க்கும்
பார்பரவுமிமையகிரி வேந்தனீன்ற
 பார்வதியாள்தந்தவறு முகற்குமூத்த
கார்பரவுந்திருவணிமால் மருகனான
 கணபதியினிருசரணங் காப்புதானே.

சுப்பிரமணியர்-துதி.

விருத்தம்.

ஆதிமால்மருகனான வைங்கரன்பாதம்போற்றி
சோதிசேர்கெங்கையம்மன் தூயநாடகத்தைப்பாட
வேதியன்றனைநெண்டித்த வேலணிகரத்தோனான
சோதிலாவுமையாளீன்ற குமரவேள்பாதம்போற்றி.

விநாயகர் வருகிற விருத்தம்.

பாரிலங்குகைலைமலை நாதன்றானும்
 பண்புடனேயுமைக்கினிதாய்த் தந்தபாலன்
பேரிலங்குங்கனகமணி மகுடன்தன்னைப்
 பெருச்சாளிவாகனத்தி லன்பாயேறி

ஏரிலக்குங்கரிமுகமுங் கதிக்கையாட
யிந்திரஞ்சேர்முனிவர்மலர் சொரிந்துபோற்றச்
சீரிலங்கும்வளவநகர் தன்னின்மேவுஞ்
செங்கழனிவிநாயகரும வருகின்றாரே.

விநாயகர்வருகிற-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தாரே செங்கழனிநாதர் வல்லமைபாகன்
வந்தாரே செங்கழனிநாதர்

அநுபல்லவி.

வந்தார்விநோதமாக வானவர்மலர்சொரி
யிந்திராதிமுனிவர்க ளிருபுரநெருக்கிட வந்

சரணங்கள்.

மணிமகுடமிலங்க வண்ணப்பணிகளாட
அணியணியாய்க்கணங்க ளனேகர்நெருங்கிடவே வந்
அங்குசபாசமிலங்க ஆகுவாகனமேறி
வெங்கயமுகமிலங்க கிண்கிணியரையிற்கொஞ்ச
இன்புள்ளவளவநகர் ரிலங்குங்கணநாதர்
அன்புடனேகெங்கையம்ம னருந்தமிழ்க்கருட்செய வந்

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வளவனூரில் திருக்கோயிற் கொண்டெழுந்தருளிய ஸ்ரீசெங்கழனி விநாயகர் கெங்கையம்மன் சபைக்குவந்தபோது அக்கடவுளைப் பூசிக்கும் குருக்கள்வருகிற விதங்காண்க.

பொதுவிருத்தம்.

கோதிலாவளவனூரிற் குலவிவாழ்கணநாதற்கு
வேதநான்கதனிலோதும் விதிப்படிபூசைசெய்ய
தாதவில்மலரிறைஞ்சித் தன்பனற்கொண்டுவையத்
சோதிமுப்புரிநூற்றன்ன துரிதமாய்வருகின்றார்.

குருக்கள்வருகிற-தரு-இ-ம்-காம்போதி-அடதாளம்.

பல்லவி.

வேதியர்வந்தாரே பூசனைபுரி
வேதியர்வந்தாரே

அநுபல்லவி.

ஓதற்சரும்வளவனூரிற் றுலங்கிடாரும்
நீதியாயருட்செயு நிமலனைப்பூசிக்க வேதி

சரணங்கள்.

மஞ்சனீராடி வெள்ளிக்கடத்தில்
மலர்சள் பலவுந்தேடி
தஞ்சமென்றடைந்தோர்க்கு தயைசுரக்கும்பெம்மானை
குஞ்சிதபாதத்தானை கோதிலானைப்பூசிக்க வேதி

பஞ்சாட்சரங்கள் துலங்க திணிகொள்மார்பிற்
பளிங்குமாமணி யிலங்க
செஞ்சாலிகளுஞ்சூழ்ந்தே செழிக்கும்வளவனூரில்
மஞ்சாருங்கோபுரங்கள் வயங்குமகோயிலைநாடி வேதி

அப்பமுப்பழத்தோடு யவற்கடலை
யடிசிற் பலவுநீடும்
செப்பரியநாதற்கு சிந்தைமகிழ்கொண்டு
சேணுலகோர்தமது சித்தமயிர்மிக்கப்பண்டு வேதி

வசனம்.

இந்தப்பிரகாரம் கணநாதனைப் பூசைசெய்யுங்குருக்களானவர் மஞ்சனமாடி ஜெபதபங்களை முடித்தப்பின் வெள்ளிப்பாத்திரத்தில் அபிஷேக நீரும் மல்லிகை முல்லை இருவாட்சி யென்னுமலர்களுங் கொண்டு ஆராதனைக்குவேண்டிய அவல்கடலை யப்ப முப்பழமென்னுருண்டையுடனும்வந்துகணநாதனுக் கபிஷேகஞ்செய்து மலர்சூடி விதிப்படி பூசைசெய்யும் விதங்காண்க.

குருக்கள் கணேசனைப் பூசிக்குமந்திரம்.

ஓம்-சுமுகாயநமா ஓம்-ஏகதந்தாயநமா
ஓம்-கபிலாயநமா ஓம்-கஜகர்ணிகாயநமா
ஓம்-லம்போதராயநமா ஓம்-விகடாயநமா
ஓம்-விக்கினராஜாயநமா ஓம்-கணாதிபதியேநமா
ஓம்-தூமகேதாயநமா ஓம்-கணாதிகேக்ஷாயநமா
ஓம்-பாலசந்திராயநமா ஓம்-சூர்ப்பகர்ணாயநமா
ஓம்-ஹேரம்பாயநமா ஓம்-ஸ்கந்தபூர்வஜாயநமா

ஓம்-மகா கணாதிபதேயநமா

வசனம்.

இந்தப்பிரகாரங் கணராதரைப்பூசித்த குருக்கள்சென்ற பிறகு சத்யலோகவாசியாகிய பிரமதேவன் சபைக்குவருகிறபடியால் அச்சபையை அலங்காரஞ்செய்து காற்கும் கட்டியக்காரன் வருகிறவிதங்காண்க.

கட்டியக்காரன்வருகிற-தரு-பொர்துவிருத்தம்.

வடிவாருங்கரத்திலேந்தி வாகுவல்லயமும்வெள்ளித்
தடியுடன்சரிகைப்பாகை ஜமுதாடுமேலங்கரித்தே
கெடிபெறமுருக்குமீசை கெம்பீரமாய்த்துலங்கக்
கடுகியேபிரமன்வாசற் கட்டியன்வருகின்றானே

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் பிரமதேவன் சபையைக்காற்கும் ஜமுதாடு முதலிய பிரம்புகொண்டு ஆக்ரமித்து மீசையைமுருக்கி எதிர்நின்றவர்களை யதட்டிவருகிற விதங்காண்க.

தரு-இ-ம்- அபரூபம்-ஆதி.

பல்லவி.

வெண்ணெயுண்டமாயன்றந்த வேதனிடவாயல்காற்கும்
தண்ணமுள்ளகட்டியனும் வந்துமேவினன்

அநுபல்லவி.

பொற்சரிகைப்பாகையுட பூண்டபணிகள்துலங்க
கன்னபரிசையிலங்க கட்டியக்காரன்மேவினன் வெ

சரணங்கள்.

மட்டிலாகீர்த்தியோங்கு மாயன்மைந்தன்வாசல்காற்கும்
கட்டாரியுடைவாள்நீண்டு கட்டியக்காரன்மேவினன் வெ

தக்கப்பணிகள்துலங்கத் தாவியேநடைநடந்து
கங்கையம்மன்பாதம்போற்றிக் கட்டியக்காரன்மேவினன் வெ

வசனம்.

அகோதெப்படியென்றால் ஆ ஆ சத்யலோகவாசனாகிய பிரமன் சபைக்கு வருகிறபடியால் யாவரும் பேசாதீர்கள் சத் தசத்த.

பிர்மதேவன்-சபைக்குவருகிற-தரு.

பொதுவிருத்தம்.

உசிதவெண்கமலவாணிக் குகந்திடுமழகுகாந்தன்
பசுபதிபரமன்மெச்சப் பாரியகெதைலையேந்தி
யிசையுளகீதம்பாட வெழிற்பணியலங்கரித்தே
திசைமுகமுடையபிரம்ம தேவ னும்வருகின்றாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் கலைமகட்கினியவனாகியும் சத்யலோகமாளப்பட்டவனாகியு மிலங்குந் திசைமுக பிரமன் அனர் தம்பணிகளைப்பூண்டு பரமனாகிய கைலாசபதி மெச்சும்படியாய் சபைக்குவருகிற விதங்காண்க.

தரு-இ-ம்-வராளி-அடதாளம்.

பல்லவி.

வேதனும்வந்தாரே வுலகளிக்க
நாதனும்வந்தாரே

அநுபல்லவி.

சீதரனுடனே செந்திருவும்களிக்க
தேசுலாவவே பூசுகந்தகமும் வாசமிஞ்சியமாலையாடவே வே

சரணங்கள்.

அண்டர்களியாவருங் கண்டடிதாழவே
யெண்டிசை துதிபெற்ற தண்டங்கரத்திலேந்தி
யிலகுமணிமுடி தகதகென்னவே
பலவிதப்பணி யொளிகள்மின்னவே வே

கன்னியர்நடனமாது விஞ்ஞையர்க
ளுன்னித மாகப்பாட
அன்னவாகனத்திலேறி யாணிமுத்துப்பணிமின்ன
தன்னிகர்குடைகவிக்கச் சாமரைகளெங்கும்போட வே

சதுர்சேர்முனிவர்வீசு அக்ஷதையள்ளி
துதிமிகத் தேவர்பேசு
மதுரவாணியுடன் வடிவுள்ளவிலக்குமிக
கதிமதிமங்கள தொனியெங்குமோங்கவே வே

பிரமன்சொல் விருத்தம்.

கிக் கருழுலகோர்மெச்சச் சீர்கொளூரசபையிலோங்கும்
வித்தைதேசமதறவென்றோது வேதமுமந்திரிகேளாய்
உத்தியாலெனையளித்த வுலகளந்தோன்களிக்க
சந்ததமவன்றனைத்திச் சதிருடன்வாழுவோமால்

வசனம்.

அகோதெப்படியென்றால் கடல்சூழுலகில் ஓங்கும் மாந்தர்கள் மெச்சும்படியாகிய வித்தையையும் மதியையுமுடைய மதிவென்று சொல்லத்தக்க மந்திரி என்னைதனது உந்திக்கமலத்தினிடமாய ஜனிப்பித்து புவியின்கண்ணிலகும் எழுவகைத்தோற்றத்தையுஞ் சிருஷ்டிக்கும்படியாக அருளைத்தந்த ஆண்டவனது பாதாம்புயத்தையனுதினமுமறவாமல் துதித்துவருவோம் மந்திரி.

எமதருமராஜன் கொலுவிற்குவரும்

பொது விருத்தம்.

நெடிமுடிதன்னைச்சூடி நிகரிலாத்தண்டமேந்தி
அடியிதகாலதூதாஞ்சலி செய்துசூழ
இடிகொளும்பகட்டின்மீது கிரியதுபோலவோது
மிடிநிகர்குரலையுற்ற யேமராஜன்வந்தானே

இதுவுமது-தரு-இ-ம்-சாவேரி-அடதாளசாப்பு.

பல்லவி.

தேசதெண்டனைசெய்யு மீசனேமதரும்
ராஜன்விஸ்வாசன்வந்தான் கிடாவிலேறி-ராஜ

அநுபல்லவி.

மாசிலாமணிமுடிபேசுங் கதிர்பெற்றன்னை
தேசுலாவும்பிரமன் சிறப்பதெங்கணுமன்ன
மற்றுமுள்ளவதிசுத்தவீரநும் சித்ராதியோர்பத்திசெய்யவே தே

சரணங்கள்.

நீலகிரி=துபோற் றோளிரண்டுமிலங்க
காலபாசமுங்கையிற் சூலதெண்டந்துலங்க
நிகரிலிருசெவிக்குண்டலங்கடுன்னபகருமுகிவர்பகள் பண்பதாய்துன்

வந்தனுதரெவரு மலரடிவணங்கிட
முந்தும்பிறையைப்போலத் தந்தங்களொளியிட
தன்மைசேர்தாள்பூரிபேரிகையெண்ணிலாதடமாரமொலிசெய் தே

உருண்டவிழிபடைத்தே மிரண்டபார்வையுடனே
யிருண்டமலையைப்போலே திரண்டபுயத்துடனே
மூர்க்கமொழியுடன்வந்தசூரியன்விந்தையாகவே தந்தருமணி தே

எமன்-சித்திராபுத்திரனுக்குச்சொல்-விருத்தம்.

செய்தொழிலறிந்திருக்குஞ் சித்திராபுத்திரனேகேளாய்
ஆய்யமுற்றுலகுமெங்கு யக்ரமுமிருக்கதாலே
மெய்மதற்கொழிவிலாத வேலைகள்வந்துதிப்போ
தெய்வமேஇதற்குவேறே செய்தொழிலறிகிலேனே.

வசனம்.

வாருமப்பா சித்திராபுத்திரனே உலகின்கண்என்னுல் நடத்தப் படுந்தொழில யாவுமறிந்தீயாதலால் இப்போதுபுவியில் அக்ரமங்க ள் மிகுதியாயிருப்பதால் எனக்கு ஒழிவில்லாத வேலைகள்நேரிட்டி ருப்பதால் அதற்கென்ன செய்வேனப்பா.

இதுவுமது-புலம்பல்-தரு இ-ம்-கமாசு- அடதாளம்.

கண்ணிகள்.

சூரியன்சுதனுகிவீரியஞ்செலுத்தினன் வந்தேன்-இப்போ
பாரிலக்ரம்மிஞ்சி மாராததொழில்செய்து நொந்தேனே
ஆலகாலமுண்ட சூலபாணியிக்கோல மாச்சுதையோ-எந்தன்
காலதுதருக்கும் வேலையொழிவில்லாமல் போச்சுதையோ
பதவிக்கிடமில்லாமல் மதங்கொண்டார்மானிடர்சங்கரனே-தொழி
மிதமில்லையாதலினுல் வேருவகையறியேன் சங்கரனே [லோ
மண்டலத்துமானிடர் துண்டத்தனத்தினுலே சங்கரனே-அவரை
கண்டிக்கவோவெனது கைகள்மிகச்சோருதே சங்கரனே-எனக்கு
பரமேயிவ்வுலகினிற் பாபமிகுத்ததாலே-சங்கரனே
வாராத்தொழில்மிஞ்சி வருத்தமதென்செய்குவேன்சங்கரனே

அன்னியாயமாயுலகிரக்ரம்மிகுந்திடச்சங்கரனே-ஏழையு
யென்றால்முடியுமோ இவ்விருதொழிலதுசெய்ய-சங்கரனே.

இதுவுமது-விருத்தம்

காலதூதுவரேயெந்தன் கருத்ததைச்சொல்லக்கேளீர்
வேலைகள்மிகுந்துவந்த விதமதையகற்றவேண்டி
சாலஞ்செய்யாமலந்த சதுர்முகன்றன்பாலயாமுங்
காலமதெடுத்துரைக்கக் கடுகவேசெல்வோமவாரீர்.

வசனம்.

வாருங்களப்பா காலதூதர்களே உலகத்தில் ஓங்கும்மானிடர்களால் அக்ரமங்கள் மிகுதியும் விசேஷப்பட்டு நமக்கும் ஒழிவில்லாமல் துன்பத்தை தரும் வேலைகள் வாய்த்திருக்கின்றமையால் ஜாலஞ்செய்யாமல் சதுர்முகனாகிய பிரமனிடஞ்சென்று நமதுகுறையைச்சொல்லுவோம் வாருங்கள் தூதர்களே.

இயமன்-பிரமனைப்பணிந்து-கூறும்-கவி.

சதுர்முகதேவாவோது சத்தியலோகவாசா
மதுரவாணியின்சமேதா பலரடிபோற்றிபோற்றி

பிரமன்-இயமனுக்குச்சொல்-கவி.

கதிரவன்மைந்தாவாழி காலதூதுவர்கள்சூழ
மதிமுகம்வாடிவந்த வகையெனக்கறிவிப்பாயே

இயமன்செல்லுந்தரு-இ-ம்-பியாகடை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேதனே நீயறியச்சேதி யொன்றுமில்லை
மெய்யனேகேளுமையா

அநுபல்லவி.

பூதலமதனிலே நீதிநெறிகளிற்றப்
போதையாற்றொழில்மிஞ்ச லாகையால்மனமஞ்ச வேத

சரணங்கள்.

வஞ்சகமுஞ்சூதும் சஞ்சலமுந்தீதும்
வாதுகளுமிஞ்சியே லோகமதில்
பஞ்சபாதகத்திற் கஞ்சாமல்மானிடர்கள்
பயபக்தியில்லாவைபோகம்
என்சொல்லுவோம்தொழில்மிஞ்சவேநொந்திட்டோம்
கஞ்சனேயுன்பாதம் காணவேவந்திட்டோம் வே

பூமியிலேமெத்த காமியர்க்கோகாலம்
புண்ணியமில்லாஜென்மம்
ஆமிதுபொய்யாதாமென்றுரைக்கவு
மதற்குஞ்சாட்சிசொல்லுங்கன்மம்
நேமம்நெறிங்கற்றி வைத்தோரைக்கண்டிக்க
வாமேஒருவனுலேயதைக் கண்டேன்தெண்டிக்க வேத

திருக்குகளுலகத்திலிருக்கவேண்டுமென்றால்
தேவனேயெனை தள்ளிப்போடும்
வுருக்கமாய்நாளுமே யிருக்கவேண்டுமென்றால்
வுலகில்சிலர்க்கு சொற்கந்தேடும்
பொருக்குமோவுலகங்கள் பூமியைப்படைத்ததய்யா
அருக்கன்சேயனேனையு மாதரித்திடுமெய்யா வேத

பிரமன்-இயமனுக்குச்சொல்விருத்தம்.

மரலியேயஞ்சவேண்டா மானிடர்தமக்குசொற்கம்
தரணியிலென்னலாமோ தயாபரன்றனைப்பணிந்து
வரமதுதாவுனக்கும் வகைதேடிவருவேனிப்போ
பரமனர்பக்கலுக்கு பரிவுடனேகுவோமே

வசனம்.

ஆ இரவிமைந்தனுகிய மறலியே நீயாதுக்குமஞ்சவேண்டாம் பூமியில் வாழு மாந்தர்களுக்கு மோட்சசாம்பிராச்சியங்களைக்கொடுக்க என்னாற்றாமோ ஆதலால் தயாபரமூர்த்தியாகிய ஸ்ரீகயிலாசபதியிடஞ்சென்று உனக்குவேண்டிய வரங்களைத்தரும்படியாய்ப் பணிந்து கேட்டுக்கொள்ளுவோம் வாருமப்பா எமராசனே.

கைலாசபதியாகிய-பரமசிவன்-வருகிற-பொதுவிருத்தம்.

அரியயனமரர்சித்த ரருமுனிவோர்கள்போற்ற
வரிசிலைச்சூலம்வேலும் மான்மழுகரமிலங்க
கரியுயாலமாடக் கங்கைசெஞ்சடையிலாட
பரிவுடன்விடையிலேறிப் பரமனும்வருகின்றாரே.

ஈசன்வருகிறதரு-இ-ம்-ஆரபி-ஏகதாளம்.

பல்லவி.

ஈசன்வந்தாரே கைலாசவாசன் வந்தாரே.

அநுபல்லவி.

மாசிலாதவுமை வாமத்திலொளிர
மன்னனுந்தேவாதி மாதவத்தோர்களும்
தேசுலவுங்கருட காந்தவர்சித்தர்
திவ்யவித்தியாதாரும் புகழ்ந்தேத்திட — ஈசன்

சரணங்கள்.

மாமறைகளெங்குமோங்க கணங்கள்
தூய்மணிகுடைகளேந்தாங்க
சாமரைகளரம்பையர்கள்வீச தக்கவிருடியர்புகழ்பேச
காமனைக்கண்ணாலெரித்தமஹேசகழலிணை நாளுந்தொழுவோர்
விஸ்வாச (ஈசன்)

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஸ்ரீகைலாசபதியாகியஉமையேசன் முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் கருடகாந்தர்வர் சித்தவித்யாதரர் யாவரும்புடைசூழ மாதவத்தோர்கள் முடிதாழ சிவகணங்கள் நவரத்னகசிதமாகிய குடைகளேந்த அரம்பையராதி யப்ரஸ்திரீகள் ஆலவட்டந் தாலவட்டமுதலிய சாமரைகள்வீசக் கொலுவீற்றிருக்கையில் மாரியாகிய பிரமனும் மலரோனென்னும் பிரமதேவனுந்தங்கள் மனதிலுள்ள குறையைப் பரமசிவனைப் பணிந்துரைக்கின்ற விதங்காண்க.

தரு-இ-ம்-உசேனி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சங்கரசிவகங்கைவேணிய ஓமரோஹரா
சாம்பசிவனே சரணமையனே

திங்களணியும்செஞ்சடைப்பரனே ஓமரோஹரா
செப்புதற்கருமான்மகழுகரனே

வன்மைசேர் மண்ணுலகமதனிலே ஓமரோஹரா
வளர்ந்ததேபாப மறைந்துபுண்யம்

அண்ணலேயும தெண்ணமகற்றி ஓமரோஹரா
அக்ரமங்களுமிகுதியாச்சுதே

பஞ்சபாதகர் பாரிலோங்கியே ஓமரோஹரா
பாழுரசெயல் பான்மையேசொலாய்

அஞ்சிராமுமைத் தஞ்சமென்றுமே ஓமரோஹரா
அந்தகனவன் சிந்தைவாடுகிறுன்

உற்றசேதியுன் சித்தமறியவே ஓமரோஹரா
வும்மிடம்வந்தோ முண்மையாகவே

பக்தியாகவே வெற்றிதந்திட ஓமரோஹரா
பாருங்கிருபை தாரும்நாதனே

இதுவுமது-விருத்தம்.

பூமியிலேகுலம்பழுதுநேரலாலும்
 பொய்சாட்சிசொல்லிகடன்கழிப்பதாலும்
காமிகளாலக்ரமங்கள்மிகுத்தலாலுங்
 கடன்கொடுத்தோர் நான்முறற்றேயிருப்பதாலும்
நேமமுடன்நீதிநெறிபிசகலாலும்
 நீதியில்லாஏழையர்கள்வாடலாலும்
ஆமிதுவோபாரகதிக்குவழியில்லாம
 லந்தகனும்நொந்துவந்த னறிகுவீரே.

வசனம்.

கேளும் சர்வலோகசரண்யனுகிய சிவபெருமானே பூமியின்கண் ஒக்கும்மாக்களது வர்ணுஸ்ரமங்கள் பிரண்டிருப்பதாலும் அம்சின்

முன்னிலையில் சிலமானிடர் பொய்சாட்சிகள்சொல்லி தங்களதுகாலத்தைக் கழித்துவருவதாலும் தங்கள் தங்களுக்குரிய இல்லாளிருக்கும் மோகவிகாரத்தால் பரஸ்திரீகமனஞ்செய்து அக்ரமித்து நடப்பதாலும் தாங்கள்தேடியபொருளை வீணிற்சிலவழித்துபிறர்பால்கெஞ்சிவாங்கிப்பொருளை கடனாகக்கொடுத்தவர்கள் கேட்குங்காலையில் அவர்களதுமனநடுங்கப் பேசுங்கால் கொடுத்தவர்களது மனநடுக்குற்று தலைகுனிந்திருக்கும் தன்மையினாலும் அவ்வர்ணாஸ்ரமத்திற்குரியநீதியின்படி ஜெபதப ஓமவிரதங்களையனுஷ்டிக்காத தன்மையினாலும் பொருட்குன்னியராகிய ஏழைகள்மிகுதியுந்தங்களதுமனவாட்டமுற்றிருப்பதாலும் அன்னவர்கள் தென்றிசைத்தலைவனது ஆட்களாய் வருத்தத்தைக்கொடுத்து முத்திமோட்சத்தை யடையாமலிருக்கின்றார்கள் நாதனே.

சிவபெருமான்சொல்-விருத்தம்.

மலரயன்மாலிகேளீர் வருத்தநீர்படவேவேண்டாம்
உலகெலாமன்பருக்கு முதவியுந்துஷ்டருக்கு
நலமுடன்தெண்டித் தென்னவர்பதமெனவேண்டி
இலகவேமனங்களித்து மிருப்பிடஞ்சேருவீரே

வசனம்.

கேளும் சிருஷ்டிக்குரிய பிர்மனாகவும் தெண்டனைக்குரிய அந்தகனாகவும் வயங்துங்கன்னியர்களே உலகத்தின்கண் கண்ணோங்கும் அன்பர்களுக்கு கருணைசெய்தும் துஷ்டர்களைச் சிஷ்டைசெய்தும் தென்னவனைப் பணியும்பொருட்டாயாவுஞ்செய்து களிப்பிக்கச்செய்யுந் தன்மைநன்மை நம்மிடத்திலிருப்பதால் நீங்கள்யாதுக்கு மஞ்சாமல் உமதிருப்பிடம்போய் சேர்வீர்களப்பா.

பொது விருத்தம்.

பகலவனெனவேதிவ்ய பணிகளுமலங்கரித்து
சகலருமதிசயிக்க சரிகைபட்டாடைமின்ன
தகதகவெனவேதண்டை சதங்கையுஞ்சிலம்பொலிக்க
ஜெகமெலாந்துதிக்கெங்க தேவியும்வருகின்றாளே.

கெங்காபவானி-வருகிற-தரு-இ-ம்.

பல்லவி.

கதிரொத்தமணிசித்ர மதியொத்தசமுகின் மிக்க
கெங்காபவானிவந்தாள் பாமன்பககல் கெங்

அநுபல்லவி.

துதிபெற்றமாதர்கள் வதனத்திலுமிக்க
சோலைக்கிளிமொழி லாலைக்குயிலென
சேலைக்கதிர்குண சாலிவஜிகரி கதி

சரணங்கள்.

சங்கரன்சடை தனில் தங்குந்தயாபரியாள்
தைவல்சிரோமணி வந்தாள்
தங்கவளையல்கொஞ்சக் கங்கணங்கரத்தாட
நாவுநற்பத கோவைகனியிதழ
தேவரடியார்கள் சிரமவிமோசனி கதி

பச்சைக்குரும்பைக்கொங்கைச் செங்கணுமேமின்ன
பதக்கம்பளப ளென்னவே
வச்சிரக்கொந்தளவோலை யுச்சிதமலாய்சொலிக்க
வாடைபரவிய வாண்டபரிமளம்
பேடைதிருநடை ஜாடையாகவே கதி

மாதர்கவரிவீச வேதமுனிவர்பேச
மங்கையர்புடை சூழவே
பாதச்சிலம்புமிஞ்ச நாதகிசங்களமிஞ்ச
பாசத்துடன்மிகு வாசமிகுந்திட
நேசத்துடன்சரு வேசனைக்காண கதி

கெங்காபவானிசொல் விருத்தம்.

விதிசிரமணித்தகையா விடமுண்டநீலகண்டா
மதியணிசிவமேயுந்தன் மலரடிபோற்றிபோற்றி
அதிவிரைவாகவிந்த லமரர்சூழ்சபைக்கழைத்த
துதிபெரும்விதமெனக்குச் சுந்தரர்வருள்செய்வீரே.

வசனம்.

பிரமா கபாலத்தையேந்திய கானே நீலகண்டமூர்த்திமூன்றும் பிறையைத் தரித்திலங்கும் பெம்மானே தேவரீரது உபயபாதாம்புயங்கள் போற்றிபோற்றி தேவர்முதலிய யாவரும் புடைசூழ்ந்திருக்குமிச்சபையின்கண் அடியாளை அதிதீவிரமாய்வருவித்த காரணம்யாதோ வதனை திருவாய் மலர்ந்தருள வேண்டும்சுவாமி.

கெங்காபவானிக்குப் பரமசிவன்சொல்

விருத்தம்.

கெங்கையரேநீவாழியுலகிற்பாபங்
  களக்கயெமன்றொழில்மிகுத்துவயனுக்கோத
பங்கயனும்வந்துறைக்க நமன்களிக்க
  பாசமுடன்வரமளித்தே னதற்குநீயு
மங்களஞ்சேர்மறைகுலத்திற் செல்வியாகி
  மானிடர்க்குவினையூட்டி மகிமைகாட்டி
பொங்கமுடன்றெண்டித்தாற் றுதிப்பார்நம்மைப்
  புகழுமுண்டுபுவனத்திற் கேகுவாயே.

வசனம்

கேளும்பெண்ணே கெங்காபவானியே உலகத்தில்வழங்கும்மானிடர்களால் அக்ரமங்களாகிய குற்செய்கைகள்மிகுந்து அதனால்பரமபதிகரிக்க அக்குற்றமுடையவர்களைத் தெண்டிக்கும் பொருட்டாய் நியமித்திருக்கும் அந்தகனாகிய எமனுக்குஒழிவில்லாமல் தொழிலதிகப்பட்டிருப்பதால் அவன் பிரமனிடத்தில் முறையிட அப்பிரமன் என்னிடம் முறையிட்டபடியால் அத்துன்பமகலும்படியாயவனுக்கு அனுக்கிரகித்தேனாதலால் நீ அதன்பொருட்டாய் புவியின்கண்ணேக்கும் மங்களாகரமாகிய மறையவர் குலச்செல்வியாய்ஜனித்து துன்மார்க்க முற்றவர்களுக்கு வினையைப்பூட்டி உனதுமகிமையைக் காட்டி சந்தோஷகரமாய் தெண்டிப்பாயாகில் அப்போதுநம்மையாவரும்புகழ்ந்து நன்மார்க்கத்தில் நடந்துவருவார்களாதலால் பூலோகத்திற்கேகுவாய் பெண்ணே.

கெங்காபவானிசொல்-தரு-இ-ம்-சங்கரா-ரூபகம்.

கண்ணிகள்.

நாதாநவநீதாயிதுநமக்கு நல்லதல்லவேசொல்லும்
பேதபேதமுண்டோயென்னைப் பிரியமனம்வருமோ

பிஞ்சகனே மனம் சஞ்சலமாகவே
அஞ்சவேசெய்திடும் வஞ்சகமேதோ நாதா

பரமசிவன்சொல்தரு-இ-ம்-அடாணா-ரூபகம்.

கண்ணிகள்.

சொன்னமொழிதவறாம லதிக்கமன்ணினேருன்னை
வண்ணகுயிலேகீர்த்தி வருமேநலந்தருமே
மண்டலத்திற்ஜென்மக் கொண்டுமேநீயிரு
துண்டர்கடமைமயே தெண்டனைசெய்யவும்

கெங்காபவானிசொல்தரு-இ-ம்-சங்கரா-ரூபகம.

கண்ணிகள்.

நலமோ இதற்கென்செய்வே னட்டிவிடர்காட்டால்சுவாமி
உலகோரென்னைவையாரையோ வோதுங்கவீதா
உத்தமதேவனே சுத்தமுமவாடுதே
பத்திசேர்மறையவர் புத்திரியாவ நல

பரமசிவன்சொல்தரு-இ-ம்-அடாணா-ரூபகம்.

கண்ணிகள்.

கண்டேயுந்தன்மகிமை கருத்தினிலன்புகிருத்தி
கொண்டாடுவோர்குறை தீர்க்கோருகிருபைக்கண்பாரு
குற்றமேதுவடிவுத்தம்பியாளே
மெத்தவே நலம்பெற்றிடுவாய்நீ கண்

கெங்காபவானிசொல் விருத்தம்.

கண்ணிகள்.

முப்புரமெரித்தநாதா முக்கணஞானமூர்த்தி
வொப்பிலாப்பரனேயுக்த வொளிபெருஞ்சடையினின்று
மெப்படிநீங்கினலு மிருந்துபூலோகந்தன்னில்
தப்புரையின்றிவாழத் தையலாளறிகிலேனே.

வசனம்.

ஓ திரிபுரதகனா திரிநேத்திரதாரியாய் விளங்கும் ஞானமூர்த்தி ஒப்பொருவரில்லாத பரமே உமது வொளிபொருந்திய சடாடவியி

னின்றும் அடியாள் எப்படிபிரிந்து பூலோகத்தில் ஜெனித்துயாதொருகுற்றமுமின்றி வாழுவரிவேனோ சுவாமி.

பரமசிவன் கெங்காபவானிக்குச்சொல்தரு-இ-ம்-சஹானா.

கண்ணிகள்.

கவலையேனுனக்குபுவன்ரக்ஷிகெயனும் சங்கைநாயகியேநீயே
சருதருமூலகினில்பெருமைப்பெற்றுநீ களித்தங்கிருப்பாயே
கானமாகவே தினமாமறை
யினமாகுவதனமேவிய கவலை

கெங்காபவானிசொல்தரு-இ-ம்-பியாகடை-ரூபகம்.

கண்ணிகள்.

உம்மைப்பிரிந்திருக்கவசமோ வுமையாள்பாகா
வோதுமறைகுலத்தி லுதிக்கவுநீதியோ
வுரகபணிகரனேமழுகரா
ஓதுந்தற்பரனே பராபரா உம்மை

பரமசிவன்சொல்தரு-இ-ம்-சஹானா-ரூபகம்.

கண்ணிகள்.

மண்ணும்விண்ணும் புண்ணியதீர்த்தமானநாயகி
வளருங்கீர்த்தியதனைத் தளருவதேன்வேண்டாம்
மகிமைசெலுத்துவாய் மதியினாலினை
பதியின்மானிடர் கதியைச்சேரவே மண்ணு

கெங்காபவானிசொல்தரு-இ-ம்-பியாகடை-ரூபகம்.

கண்ணிகள்.

இரும்புவியிற்றெய்வங்க ளிருக்கப்பலபலவா
யென்னையெவர் துதிப்பா ரேகநாயகனேசொல்
எநதன்வல்லமை யேகநாதனே
ஈசனேவிசுவாச் னேசனே இரும்

பரமசிவன்-கெங்காபவானிக்குச்சொல் விருத்தம்.

வேதியன்மனவியாரும் விரதமுற்றிருப்பாள்நீபோய்ச்
சோதிசேர்செல்வியாகத் தோன்றியேதளர்ந்துமீண்டு

மாதிமாலருளப்பெற்றே யடாவினையகலத்தேவர்
வாதினாலவர்களுண்மை வசமாக்கிபுகழ்கொள்வாயே

வசனம்.

சேளும்பெண்ணே கெங்காபவானியே பூமியின்கண்வேதியர்மாபில்வுதித்த வேதநாயகியென்னுமோர் பார்ப்பிணியானவள் குழந்தையில்லாத தன்மையால் கெங்கைக்கரையில் விரதமனுஷ்டித்துவருகிறாள் நீபோய் அதிரூபலாவண்யமுடைய பெண்குழந்தை வடிவமாய் அக்கெங்கையிற்றோன்றி மிதப்பாயாகில் அன்னவளுன்னைக்கண்டு சந்தோஷங்கொண்டு எடுத்துக்கொண்டுபோய் வளர்த்துவருங்காலையில் நீயவளின்றும்மீண்டு வடவேங்கடத்துறையும் வள்ளலாகியமாயவனைப்பணிந்து அவரால்வேண்டிய வரங்களைப்பெற்று லோகத்தில் வினைக்குரிய தெய்வங்களோடு வாதமிட்டுஜெயித்து உன்வசப்படுத்தி பூமியெங்கும்புகழ்நாட்டி யாவருக்குமருட்செய்து அக்ரமங்களைப்போக்கி வருவாய்பெண்ணே.

கெங்காபவானிசொல் விருத்தம்.

என்னயான்செய்வேனையோ ஈசனார்விடையளிக்க
உன்னிதவார்த்தையாலே உருகியேயெனதுநெஞ்சம்
துன்னியமேனிவாடிச் சோருதென்னுடலமெல்லாம்
அன்னவூர்தியனையைப்போ வருஞ்சடைநீங்கினேனே.

வசனம்.

யான் இனியென்செய்வேனையோ ஜகதீசனாகிய எனதுநாயகன் செய்த கட்டளையாகிய உன்னித வார்த்தையைக்கேட்ட எனதுநெஞ்சமானது வுருகி பிரகாசம்பொருந்திய மேனியுங்குலைந்து உடலுஞ்சோர்ந்துதுடிக்கின்றதே இவற்றை யோசிக்குங்கால் அன்னவாகனனாகிய பிரமன் விதித்தவையோ சடாடவியைவிட்டு நீங்கலாகினேன் என்செய்வேன் அந்தோ.

இதுவுமது-தரு-இ-ம்-வசந்தா-அடதாளம்.

பல்லவி.

என்னஜென்மமெடுப்பேன் பூமியின்கண்ணில்
யெப்படி சகித்திருப்பேன்

அநுபல்லவி.

அன்னமேறும்பிரமதேவனைமத்தலைதயோ
வாசபர்சமுடனே யிசன்செஞ்சடையினில்
உசாமலிருந்தேனே மோசம்வந்ததேயிப்போ என்

சரணங்கள்.

எத்தனைபேரென்னை வைவாரேவினையாக
மிகல்விளைப்பதால்பத்தி செய்வாரோ
பத்தினிவேதநாயகி பெற்றமகளென்றும்
பாவியவனைவிட்டுத் தாவிவினைபைத்தொட்டு
மேவிமானிடர்யாரு மாவிபதரிடவே என்

திங்களணியுங்கால காலனே இனியென்
செய்வேன்மங்களருண லோலனே
சங்கைப்பிணிமென்றென்னைக்காசினியோரேசவைத்தாய்
சாருமுமதுக்ருபை பாரும்பராபரனே
சீரும்புகழுகொள்ளத் தாரும்வரமெனக்கு என்

மூர்த்தியிப்படியோர்கால் நொந்தேனேசுராறல்
எந்தன்உடலம்வாடி வந்தேனே
அந்தவிதமாச்சுதையோ வகிலலோகந்துதிக்க
வாராய்த்துயரமுடன் பாரோர்வினையுறவே
மருக்கவலையுடன் தாராார்புகழ்தரவே என்

வசனம்.

அஃதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கெங்காதேவிபுலம்பிக்கொண்டிருக்கையில் திருப்பதிஎன்னும் தலத்தில்வாசஞ்செய்துகொண்டிருக்கும் மறைகுலச்சிகாமணியாகியபூசுடர்வேங்கடத்தானை தெரிசித்து மனைக்கு வருகின்ற விதங்காண்க.

மறையவர்வருகிறதரு-இ-ம்-சஹானா-ஆதி.

பல்லவி.

வேதாசாரசன்பெற்றே நீதியில்மனம்வைத்த
வேதசிகாமணிவந்தார் மனைக்குன்பாக வேத

அநுபல்லவி.

ஆதிமலாவிந்த பாதமதைத் துதித்து
வரசையாகமேவகரம் வீசிகடைநடந்து வேத

சரணங்கள்,

முத்துக்குல்லாவுந்தரித்தே வெற்றிமொழிகள்பேசி
மோகனமாலைக ளாட்டவே
கைத்தலந்தன்னிலே சடகம்பளபளன்ன
வித்தையிலுயர்ந்திடு வேதவேதியர்மெச்ச வேத

பட்டநாமந்துலங்கக் கட்டுங்கலையிலங்க
பதக்கம்பளப ளென்னவே
வட்டக்குடைபிடித்தே வாடைக்கமகமென்ன
அட்டியில்லாமலே யழகாய்நடைநடந்து வேத

உலகெலாம்பணிந்தேத்துந் தலைவன்மீதுமிக
வோதும்வேதங்கள் பேசியே
பலகலைகளுமாய்ந்து விலைபிசகாத்திரன்
நலஞ்சேர்மணமுலவு நறுமலர்களைச்சூடி வேத

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் விதிகுலசிகாமணியாகிய பிராமணன் தனதுமனைக்கு வருவதைகண்டு அவர்தேவியாகிய வேதநாயகி வருகிற விதங்காண்க.

திபதை.

அருமறைகுலத்துதித்தே யழகியவதனவஞ்சி
பெருமதிமுகமிலங்கப் பின்னலார்சடையுங்குப்பி
திருமணிபணிகளாடத் தேன்மொழியணையமின்னால்
நறுமணவீசவேத நாயகிவருகின்றாளே.

வேதநாயகிவருகிறதரு-சஹானா-ஆதி.

பல்லவி.

சீதரனருளப்பெற்ற சேல்விகர்விழியாளென்னும்
வேதநாயகிவந்தாள் நாதனைக்காணவேத சீத

அநுபல்லவி.

ஓதும்பலமணிக ளொலிரவேஜாடையிற்
சீதமலர்க்கதம்பந் திகழ்ந்திடபுவிமீது சீத

சரணங்கள்.

பாடகந்தண்டைகொலுசு பதக்கப்பளபளென்ன
நாடெலாம்பரவிய நாரணனெனவேதுன்ன சீத

சிற்றிடைபட்டுடுத்திச் செம்பொன் னலொட்டியாணமிட்டே
முத்துமாலைகளணிந்தோர மூதுணர்ந்தோரோதிய சீத
பைங்கொடிமார்புடைசூழ பண்புளோரெவருந்தாழ
வித்தைசேர்நடைநடந்தே வேங்கடத்தானெனவோது சீத

வேதநாயகிசொல்-விருத்தம்.

வந்தனம்பிராணநாதா வயதறுபதுவுமாச்சு
குந்தகமில்லைசெல்வங் குறைவில்லையிதுவரைக்கும்
சந்ததியற்றிடாத தன்மையாற்றயங்கிவாடிச்
சிந்தையுமுருகுதையோ தேவனேயென்செய்வேனே.

வசனம்.

சரணம் சரணமையா பிராணநாயகா நமக்கானல் வயது அறுபதிற்குமேலாகியும் இதுவரையில் புத்திரபாக்கியமில்லாமற் மற்றயிதரபாக்கியங்களால் கதியுண்டாமோ என்செய்வேன் எனதுபிராணவல்லபா.

தரு-இ-ம்-வினவிடைக்கண்ணிகள்.

என்னபாவஞ்செய்துபிறந்தோமே அடிபெண்ணேகண்ணே
யிந்தநாள்சந்ததியுமில்லையே
அன்னவூர்விதிதன்னைவெல்லவே என்மானேதேனே
யாராலாகுமோ வேதவாய் அடிபெண்ணேகண்ணே யா

விடை பிள்ளையில்லாப்பாவியாகியே யென்பிராணநாதா
பெருமையிழந்தேனே நாயகா
வெள்ளலர்செய்லோவிது வுள்ளம்வாடினேனுமக்கு
வந்தபாவியென்தன்விதியோ என்பிராணநாதா வந்த

வினா கோவையாளேவாதையேதுனக்கு யென்பெண்ணேகண்ணே
குலந்தழைக்க நலமுமில்லையே
ஆதிமாயன்பாதம்போற்றி யன்பர்கட்குதவிசெய்து
மருந்தவமிழைத்துமில்லையேயடி என்பெண்ணேகண்ணே ம

விடை பட்டணமெங்குஞ்சூழ்ந்தையை யென்பிராணநாதா
பார்த்துகண்கள் பூத்துநொந்தேனே
கட்டளைபிரமன்செய்தவமோவல்வினையோ
காசிமலடியானேனே என்பிராணநாதா காசி

மறையவன்சொல்-விருத்தம்.

பொருந்தியயெவ்வனத்திற் புத்திரனுதிக்குங்காலம்
வருந்தினேமினிச்சந்தானம் வருகுமோகாலந்தானே

யிருந்தநீமுத்தந்தன்னி லெழில்மிகுமையந்தராசை
மருந்தநாம்வாழ்நாடன்னே மகிழ்வுடன்போக்குவோமே

வசனம்.

கேளாயெனது பிராணநாயகியே உலகத்திலோங்கு மானிடர்களுக்குரிய காலங்களில் எவ்வனகாலத்தில் புத்திரபாக்கியங்கைக்கூடுமேயன்றி மூப்பில்கூடமாட்டாது அதுபோலநமது எவ்வனத்தில் எத்தனைநோன்புகளிழைத்தும் அறைபுறை வழாதநடந்துங் கிடைக்காமற் போய்விட்டதாகையால் இப்போது கிடைக்கப்போகிறதா ஆதலால் அவ்வெண்ணத்தை மறந்து முத்தத்திலிருந்து மகிழ்ச்சியோடும் நமதுவாழ்நாளைக் கழிப்போம் பெண்ணே.

பொது-விருத்தம்.

மங்கையும்விசனமுற்று மறுமொழியுரைத்திடாமல்
நங்கையும்ஸ்நானஞ்செய்து நதிக்கரைதன்னில்வந்தே
கங்கையின்கரையினின்று காலநாட்டின்புபூட்டி
குங்குமக்களபம்பூசிக் குறித்துமே துதிசெய்வாளே.

வசனம்.

ஆகோதெப்படியென்றால்வேதநாயகியெனும் பார்ப்பினிதனது நாயகனுரைத்த மொழிக்குபதில் யாதும்பேசாது தினந்தோறுங்கங்கைநீராடி குங்குமகதம்பங்களணிந்து அக்கெங்காபவானியைத்தியானித்துக் காலநாட்டி அன்புபூட்டி புத்திரபாக்கியங் கிடைக்கும்படியாய் துதிசெய்யும் விதங்காண்க.

வேதநாயகி-கெங்காபவானியைத் துதிசெய்யுந்தரு-இ-ம்-தக்கடா.

கண்ணிகள்.

சிந்தையிலன்பாகவந்தேஸ்தானஞ்செய்துகொண்டேன்-திவ்ய
கந்தமிகுந்திடும்நந்தவனமதைக்கண்டேன்
மல்லிகைமுல்லை மருவிருவாட்சிகள்-புன்னை-பஞ்ச
வில்வமுங்கோங்குடன் வேண்டியமாமலர்த்தன்னை
பரிவாகக்கண்டேந்திக்கரையிற் கல்லைநாட்டி-ஓதும்
நெறியாகப்பூசைகள் செய்தேன்மனதின்பம்பூட்டி
ஈசன்சடையிலிருந்தாடுங் கெங்கையென்தாயே-ஏழைந்
தெழில்சேரும்புத்திர பாக்கியந்தருள்வாயே
பாரெங்கும்புகழ்ந்திடும பாபவிமோசனிதாயே
சீரோங்குமுலகத்தில் ஜீவதயாபுரிநீயே

இதுவுமது-தேவாரப்பண்.

சங்கரன்சடையில்வாழ்ந்த தயாபரியானநீயே
என்றுமேங்கினோர்கு யிருப்பவளுலகில்நீயே
கங்கையேசர்வஜீவ ரட்சகியானநீயே
என்குறைதவிர்ப்பதற்கே யின்பம்வைத்தருள்வாய்போற்றி
நீரில்லாவுலகமேது நீயிலாச்சத்தியேது
மாரிலாச்செல்வமேது வையகந்தழைப்பதேது
ஆறில்லாவுலகுக்கெல்லா மழகெனுவடியாளுக்கு
பேரில்லாக்குறையகற்றும் பேதையுன்பாதம்போற்றி

பொது விருத்தம்.

நிலத்தினிற்குரியதெய்வம் நீயெனநிதம்பூசிக்க
நலத்தினில்மிகுத்தயீசன் நல்லுரையாலேகெங்கை
சலத்தினில்மிதந்துவந்த சந்தானமதனைக்கண்
குலத்தினில்மிகுத்தமாது குழந்தையையெடுத்துச்சொல்வாள்

வசனம்.

அதேதெப்படியென்றால் இந்தபிரகாரம் வேதநாயகியென்னும்பார்ப்பினியானவள் தினந்தோறுங் கெங்கையி ஜலக்கமர்டிக் காந புஷ்பபரிமளங்களால் கெங்காதேவியை புவனத்திற்குரிய தெய்வமுன்னையன்றி வேறில்லை யாதலால் ஏழையென தமனக் குறையைத்தவிர்த்தாள வேண்டுமென்றுபூசித்து வருங்காலையில்நலத்தின்மிகுத்த சந்திரஜடாதர மூர்த்தியினது விடையேற்ற கெங்காதேவியானவள் குழந்தைவடிவமாய் அந்தநதியில் மிதந்துவருவதைக்கண்டு அதியாவலோடும் அக்குழந்தையை எடுத்தணைந்துக்கொண்டு கூறுவாள்.

வேதநாயகிசொல்தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதி.

பல்லவி.

என்னவடிவமிதுவோ நல்ல
மெழின்மிகுத்தொளிதர விதனுறுசுந்தரி யோ என்

அநுபல்லவி.

கன்னலம்தன்ரதியோ காங்கேயனுர்சதியோ
கங்கையேமாமலர் நங்கையேயிவ்வுரு
பொங்கமுடனேவந்து பென்குறைதீர்த்தவள் என்

சரணங்கள்.

பர்வதராஜன்சொல்வினையே திசைசூழுமிப்
பாரெங்கணுந் துதிக்கச்சீருடன் வந்தவள்ளியன்மாகதவல்லியோ
தாரகமலங்கள்போலும் கதிரோனுதயம்போலும்
காணுமேகபலவிதம் வேணதுண்டதிசயம் என்

கெங்கைகடாடசமிதுவோ பேதையின்குறை
கேட்டானந்தங்கொண்டெந்தவீட்டமகலவந்துசெம்பிரமனவுருவே
செங்கமலத்தையொத்த சிவந்தமெய்யினழகும்
செகமெலாந்துதித்திட மகிமையைமதித்திடப்
புகலுதற்கரிதான பகிரதிதானே என்

காணுதகாட்சிகண்டேனே ஏழையின்பங்கில்
கங்கையிலூற்றிலங்குங்கமல வல்லியைப்பெற்றே
கருதருகாட்சி கொண்டேனே
தோணுதுந்தோணுதே சுந்தரிதன்னையிங்கே
சுத்தமுடனேயிதைப் பெற்றேயென்றிதவர்கள்
யித்தலந்தன்னிலுள்ள வுத்தாரோ என்

இதுவுமது-விருத்தம்.

மாநிலாக்கெங்கையின் னருளினாலே
மகவைக்கண்டோடிய வளியினில்லாத
ஆசையினார்குழவிதனை யெடுத்துக்கொண்டே
யன்பாகமனைநாடிக் கணவன்பக்கல்
நேசமுடனடிபணிந்தேன் பிராணநாதா
நெடுங்காலநாமடைந்த துன்பந்தீர
வீசுமணிசெல்விதனை கெங்கைதந்தாள்
வேதகுலநாயகனே விரும்புவீரே

வசனம்.

அஃதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வேதநாயகி யென்னும் பார்ப்பினியானவள் விரதமநுஷ்டித்து வருநாளில் குற்றமற்ற கெங்காபவானியினருளால் கோடிசந்திர பிர்ம்மம்போன்றதோர்பெண் குழந்தை ஜலத்தில்மிதந்துவந்துகரையிலொதுக்கக்கண்டு அதிகயாவலோடுமோடி யக்குழந்தையை எடுத்துமார்போடு தழுவிக்கொண்டவளாய்த்தனது மனைக்குவந்து பிரமகுலோத்துங்கனாகிய நாயகனது பாதகமலங்களைப்பணிந்து ஓபிராணவல்லபா நெடுங்காலம் நாமடைந்திருந்ததுன்பந்தீரும் பொருட்டாய் குருமணிபோலிலங்குமோர்பெண்குழந்தையைத் தந்தாளிந்தாரும் பாருமென்று புருடனிடங் கொடுத்தாள்.

வினவிடைத்-தரு-இ-ம்.

பல்லவி.

ஏதடிநீயிந்த சூதுகள்பேசுறாய்
யிதுமெத்த நலமல்லபோடி

அநுபல்லவி.

காதலாகவெந்த மாதர்கள்பிள்ளையைக்
கன்னங்களவுசெய்து வந்தாயோ
பாதகியிதனாலே தீதுகள்நேருமே
பயங்கொண்டேநீமெத்த நயங்கொண்டுபேசாதே ஏத

சரணங்கள்.

உள்ளதானுமெத்த வுள்ளத்தைநீகண்டு
வொருமிததேமனது விட்டாயோ
தள்ளியகாலமெல்லாங் கள்ளஞ்செய்துவந்த
சங்கதியேதென்று கண்டாயோ
தெள்ளுமிவ்வுலகத்தில் பிள்ளைகளைத்திருடும்
தீரரொருவராருண் டுலகத்தில் உன்

தண்ணிமீதுபிள்ளை யின்னுமிதக்குமோ
சங்கதிநீசொல்வ தேது
உண்ணும்பெரியோரைக் கொன்னுவிடுந்தண்ணி
வுரைக்குபசனமிது சூது
வெண்ணிப்பாராமலே யேன்வீணாய்ப்பேசுறாய்
வண்ணமறியாமல் வந்துநீகூவுறாய் தண்

விடை.

விந்தைதடாகத்தில் வந்துமிதந்ததே
மெய்யென்றேயென்சொல்லை நம்பும்
வந்தவகைகண்டு சிந்தைமிகக்கொண்டு
வைததேனேனென்மெத்த அன்பும்
அந்ததடாகத்தி லாருமில்லையப்போ
சுந்தரியைக்கொண்டு வந்தேனினிப்போ விந்

வினா.

எப்படியொப்பலாஞ் செப்பியமொழி
யெங்கேயாகிலுஞ்சொல்லிப் பாரும்
செப்பமிலாவிந்த வொப்பில்லாபாதகி
தேசத்தோர்களுறாத நேரம்
கப்பிகவாடையின கந்தமணக்குதே
வெப்படியோமன தெண்ணிநினைக்குதே எப்

விடை.

கட்டியபாவாடை போட்டுங்கழுத்திலே
காணுதகாட்சியுங் கண்டேன்
வெட்டியமாமரம் போலவேனுனைப்போ
விழுந்தாகண்டஞ்செய்துக் கொண்டேன்
அட்டியில்லாமலே ஓடியெடுத்தேனே
மட்டில்லாதமுத்தம் நாடிகொடுத்தேனே கட்

வினு.

ஆர்பெற்றபிள்ளையோ நேர்பெற்றிருந்திட
வதற்குகாலபலமு முண்டு
சீர்பெற்றிருந்திட நேர்பெற்றதன்னையால்
சிந்தைகளிப்பாகக் கொண்டு
ஆர்பெற்றபிள்ளையா லெவ்விதநேருமோ
தூர்பெற்றிடுவேன் துன்பங்கள்சாருமோ ஆர்

விடை.

பேசகமென்னணியே வாதுகள்பேசநீர்
பிள்ளைக்கும்விலங்க முண்டே
பாதகியென்றாலும் பிள்ளையைக்கண்டால்
பரிவுசொல்லாதவ ருண்டோ
நாதனேநீர்விடை தாரும்வளர்க்கவே
பேதைதானென்னிட வுள்ளங்களிக்கவே பேத

மறையவன்சொல்-கொச்சகம்.

வேதகுலநாயகியேமெய்யொளிவுங்கையழகும்
பாதவிரல்மோதிரமும்பட்டாடை பொட்டழகும்
சோதிபதிபொன்முகமுந் தொல்லுலகோர்பிள்ளையல்ல
பேதமில்லாக்கெங்கையம்மன் பேரளித்தேனீவளர்ப்பாய்

வசனம்.

வாரும் எனதபிராணநாயகியே நமக்குகிடைத்த குழந்தை பேச்சையுஞ் சந்திரபிம்பம் போலிலகும் முகாரவிந்தமும் பாதவிரலணிந்திராநின்ற மோதிரங்களினழகும் இடையிலுடுத்திருக்கும் பட்டாடையினழகும் சிரோருகம்போன்ற காந்களினழகும் நோக்குமிடத்தில் இவ்வுலகவாசிகளுக்குரிய பிள்ளையல்லவோ றென்றெண்ணப்பட்டிருக்கிறது ஐயால யாதும்பேதகமில்லாமல் இக்குழந்தைக்கு கெங்கையம்மனென்று நாமகரணஞ்செய்தேனைச்குழுதையுமோடுவளர்த்து வருவாய்பெண்ணே.

வேதநாயகிசொல் விருத்தம்

மறைகுலங்களீடேறவந்த கெங்கையம்மனுக்கும
புரவலர்கள்கொண்டாட பொற்பணிகளலங்கரித்தே

திரைகடலோர்மெச்சிடவே சீராட்டிதாலாட்டி
நிறையமுது தானூட்டி நேசமுடனேவளர்ப்பேன்.

வசனம்.

கேளும் எனதுபிராணநாயகா வேதகுலமீடேறும்படியாய்என க்குக்கிடைத்த கெங்கையம்மனை இராஜராஜாக்கள் கொண்டாடும்ப டியாய் யாவரும்மெச்சத்தக்க பொற்பணிகளாலங்கிரதஞ்செய்து சீ ராட்டித் தாலாட்டி அமுதூட்டி மிகப்பரிவோடும் வளர்த்துவருவே ன் நாதனே.

வசனம்.

அகோ தெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஸ்ரீகைலாசபதியா கிய உமாமயேசன் சடாடவியில்விளங்கும்கங்காதேவியானவள் வே தநாயகியம்மனிடம் நாளொருமேனியுமாய் வளர்ந்துஐந்தாவது வய தானபிறகு தனக்குச்சமரசமாகிய அசலாத்துப்பெண்களுடன் கூடி விளையாட்டுப்பூசல் செய்துவருகிற விதங்காண்க.

இதுவுமது-விருத்தம்

சந்திரச்சூரியப்பிறையாணியிலங்கத்தனி முத்துச்சுட்டிகளாட
சம்பிரமாய்செம்பொற்சரங்கள் ராக்கடியுஞ்சடைப்பின்னல்குப்பியுங்
சுந்திரமிலகுர்தய்யவாரங்கள் திலங்கியகங்கணகடகஞ் [குலுங்க
சோதியின்மிகுத்தவறைமணி கிண்கிணி துலங்கியரத்னமூக்குத்தி
கந்தமும் பூசியவிழியிலஞ்சனமுங்கா லினிற்கொலுசு தண்டைகளும்
கனகபட்டரடைஒட்டியாணமுமிறுக்கிக் கதிரொளிபோல்மிகஜொலி
அந்தணர்குலங்கடழைத்திட வந்தாளயல்வீட்டுபிள்ளைகள்சூழ [க்க
வழகுடன்தெருவில்விளையாடகெங்கையம்மன்வந்துதோன்றினளே.

கெங்கையம்மன்வருகிற-தரு-இ-ம்- அபரூபகம்.

பல்லவி.

அகிலமெலாந்துதிக்கு மகிமைசெலுத்தும்கெங்கை
யம்மனிதோ வந்தாள்

அநுபல்லவி.

திகில்படப்பகைவர்கள் மிகவுக்ரபார்வையுடன்
சிலசிலமுனிவரும் பலபலமனிதரும்
நலமுடன் துதிசெய்யக் கலகலவென்றிந்த அகி

சரணங்கள்.

சீரூர்பணிகள்கொஞ்சப் பாரூர்பிணிகளஞ்ச
ஜெகத்துப்ரதாபி வந்தாள்
ஆருமெதிரில்லாத பேர்பெற்றமகிழ்பெற்ற
அண்டர்கண்டிட தெண்டமுஞ்செய்திட
தண்டயண்டய வெண்டியளித்திட அகி

பட்டும்பட்டாடையின்ன பொட்டும்பளபளென்ன
கதிரமணிபணி துன்னவே
கிட்டுங்கொண்டை ஜடையும் செங்கைக்கடகமாட
சீதளம்மெருகிய போதுகள்வீசிடப்
பூதலத்தன்பர்கள் மாதவயோங்கிட அதி

வேதகன்னியர்கள் போதநெருங்கிடவே
விளையாட நடந்தாளே
வீதிவீதியிலுள்ள மாதர்கள்நயம்பேச
வீரியாமலர் சூடியபரிமளம்
வுருகியபொன்னிற வொளிசெயுஞ்ருபி அதி

கெங்காபவானிசொல் விருத்தம்.

தங்கைகளக்கமாரே சந்தோஷமாகக்கூடி
யெங்கையாகிலுமெல்லோரு மிச்சையின்படிநடந்தே
சிங்காரக்கொம்மிக்கொண்டாள் சிலநேரமாடிப்பாடிப்
பொங்கமாய்மனைக்குவந்து போஜனம்செய்குவோமே.

வசனம்

வாருங்க ளக்கமார்களே தங்கைமார்களே நாமனைவருஞ் சந்தோஷமாகக் கூடிக்கொண்டு தமதுயிச்சையின்படிஎங்காகிலுஞ்சவுக்கியமா யிருக்குமிடஞ்சேர்ந்து சிங்காரக்கொம்மி முதலியவிளையாட்டுகளைச் சிலநேரமாடிப்பாடி மனக்களிப்போடும் அவாளவாளாத்திற்சேர்ந்து போசனஞ்செய்து சுகித்திருப்போம் வாருங்களம்மமார்களே.

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்-பரனி-ஆதி.

கண்ணிகள்.

என்னடியக்கமாரே யின்னந்தாமசமேண்டி
யெல்லோருங்கூடியிங்கே யிருந்துகொம்மியடிப்போம்
பொன்னனை தங்கைமாரே போடுங்கொம்மிகள்பார்ப்போம்
போகாமல்நின்றுயிங்கே புகழ்ந்துகொம்மியடிப்போம்
பட்டாடையாடக்காலிற் பாடகங்களொலிக்க
பட்சமுடன்கணபதியைப் பணிந்துகொம்மியடிப்போம்
விட்டாடைவீசிவர விக்கினரைப்பாட
விதவிதமாய்ப்பாடி மிஞ்சிகொம்மியடிப்போம்
மாருதச்செல்வமளிக்கு மயிலேறும்பெருமாளின்
மலரடியைத்துதித்தே மகிழ்ந்துகொம்மியடிப்போம்

தீராதவினையைத்தீர்க்கும் திருவேங்கடமுடையான்
சீரடியைத்துதித்தே சேர்ந்துகொம்மியடிப்போம்
ஆசையுடன்மதுவருகி லொளிருங்கெங்கை
பலருக்கோர்பதம்பாடி யடிப்போம்கொம்மி
ஈசன்சடாடவியிலிருந் தாடுகின்றகெங்கை
யிணையடியைப்பாவியிருந்து கொம்மியடிப்போம்.

இதுவுமது விருத்தம்.

அந்தணர்குலத்திலோங்கு மழகுளதங்கைமாரே
வந்துநாமநதியின்பக்கல் மனதினிலிச்சையான
விந்தைசேர்கொம்மிதாம்பி விளையாடியோய்ந்துநின்றோம்
சந்தோஷமாயெல்லோருஞ் ஜலத்தினிலாடுவோமே.

வசனம்.

வாருங்கள் மறையவர் குலத்திலோங்கும் அக்கமாரே தங்கைமாரே நாமியாவரும் மெதிச்சையின்படியே கங்கைக்கரையருகிற்சேர்ந்து விந்தைவிந்தைகளாகிய கொமமி முதலிய விளையாட்டுகளைச் செய்து மெய்சலித்து நின்றோம் இனிசந்தோஷமாய் ஜலத்திலிறங்கி விளையாடுவோம் வாருங்க ளம்மமார்களே.

இதுவுமதுதரு-இ-ம்-ரூபகம்.

கண்ணிகள்.

உத்தமிகாள்பத்தினிகாளுயர்குலமாதேநீங்கள்
உள்ளாடையுடநீரில் வாருங்கடி
சத்தண்டைகிலம்பொலிக்குந் தங்கைமார்களேநீங்கள
சலிபரமலலியோங்க கொம்மியடிப்போம்
ஆசையுள்ளபாசமான வம்புஜமேயடிநாம்
ஆரமாடத்திரமாக கொம்மியடிப்போம்
நேசமுடன்விசிக்கா நேத்தியுடனேநாமும்
நேராகக்கைதந்தே கொம்மியடிப்போம்
வஞ்சகமில்லாமலே வயங்குகன்னியர்களா
சஞ்சலமில்லாமலே சந்திரவதனிகளா
சம்பிரமுடன்யின்பமாக கொம்மியடிப்போம்
வரிசைகலையாமலே கொம்மியடிப்போம்
கங்கையின்றுதிபாடி கன்னியர்களேநீங்கள்
உங்கள்வினைகள்தீரக் கொம்மியடிங்கோள்
லெங்குமிப்படியாகப் பாருங்கடிநீங்கள்
யெங்களோ என்றைக்குங்கோலுங்கடி

பொதுவிருத்தம்.

தண்ணீரிலாடும்போது சந்தோஷமாகக்கெங்கை
எண்ணியேமகிமைகாட்ட யின்பமாய்மூழ்கியிருக்க
கண்ணீர்கள்சிந்தப்பெண்கள் கெங்கையைக்காணாதாலே
குண்ணியேதாய்தந்தைக்கு கோள்சொல்லவருகின்றாரே.

வசனம்.

அதேதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் யாவருஞ்சந்தோஷகரமாய் ஜலத்திலிறங்கி விளையாடும்போது கெங்கை யம்மனானவள் தனதுமகிமையைக் காட்டும்பொருட்டு மனதிலெண்ணங் கொண்டவளாய் அந்நீரில்மூழ்கி யசைவற்றிருக்கும்போது மற்றயாவருங் கண்டு திப்ரமைகொண்டு கண்ணீர்விடுத்தழுது அன்னவள் தாய்தந்தையரிடம் போய்ச்சொல்லுவோமென்று வருகின்ற விதங்காண்க.

அபலாத்துப்பெண்கள்சொல்-தரு-இ-ம்-சாவேரி.

கண்ணிகள்.

கன்னியரெல்லாமிருக்க	அக்கமாரே-நல்ல
கெங்கையம்மனெங்கையடி	தங்கைமாரே
பின்னிடைந்துமூழ்கினாளே	அக்கமாரே-யவள்
பின்வெழுந்துவாக்காணோம்	தங்கைமாரே
தாவித்தாவிகொண்டிடிக்க	அக்கமாரே-நேந்
தண்ணியிலேபோய்மறைந்தாள்	தங்கைமாரே
ஆவிவாடுதென்னசெய்வோம்	அக்கமாரே-அவ
ளழகையென்றுகாண்பமடி	தங்கைமாரே
ஓடியிந்தசேதிசொன்னால்	அக்கமாரே-அவர்
வுடனேவந்தெடுப்பாரடி	தங்கைமாரே
தேடியிந்தசேதிகூறத்	தாயுதந்தையு-மனத்
தேற்றயேபிழைப்பதேது	தங்கைமாரே
தங்காமலேயோடிச்சொல்வோம்	அக்கமாரே-நம்மேல்
தப்பிதங்கள்கோரவண்ணந்	தங்கைமாரே
கெங்கையம்மன்வீழ்ந்தசேதி	அக்கமாரே-பதியிற்
கடுகியேபோய்சொலவமடி	தங்கைமாரே

இதுவுமது விருத்தம்.

மிக்கதோரன்புண்டான வேதநாயகியேகேளாய்
அககரையோரம்நாங்க ளியாவருமாடும்போது
பக்குவமுடையவுந்தன் பாலகிகெங்கையம்மாள்
தகிக்கவேஜலத்தில்வீழ்ந்தாள் தயங்கியேவந்தோமம்மா.

வசனம்.

கேளுமம்மா வேதநாயகியே பெறுதற்கரிய உனது புத்திரியுடன் நாங்களனைவருங் கூடிக்கொண்டு நதிகரையிடஞ்சென்று விளையாடிக்கொண்டிருக்கையில் அதிரூபலாவண்ய பக்குவத்தோடுங் கூடியிருக்கும் கெங்கையம்மனானவள ஜலத்திலிரங்கி மூழ்கியதைக் கண்டு நாங்களுமிரங்கித் தேடியுங் காணாமற்றயங்கி வும்மிடஞ்சேதிசொல்ல வந்தோமம்மா.

பொது விருத்தம்.

வரிசையாய்ப்பெண்கள்சொன்ன வாக்கியஞ்செவியில்வீழ
அரிஅரியென்றுகூறி யப்பினாளறைந்தால்மார்பில்
வுருகியேமனதுவாடி வோவெனக்கதறிவீழ்ந்து
பரிவுடன்மகளேயென்று பாதவித்தழுகின்றாளே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இக்கப்பிரகாரம் அசலாத்துப்பெண்கள் கூட்டமாய் கூடிவந்துரைத்த மொழியைக்கேட்ட வேதநாயகியம்மனானவள் அரிஅரியென்று செவியைப்புதைத்து வயற்றிலும்மார்பிலும அறைந்துக்கொண்டு பூமியிற்சாய்ந்து வொன்றுந்தோன்றாதவளாய் கனலிடைமெழுகைப்போலுருகிக் கண்ணீர் தாரைதாரையாய்ப்பெருக ஓவெனக்கதறி சகிக்கப்படாத துன்பத்தோடும் பாதவித்திருக்கும் விதங்காண்க.

வேதநாயகியம்மன்-புலம்பல்-தரு-இ-ம்-நீலாம்புரி.

கண்ணிகள்.

ஐயோபாவிதெய்வமே செய்யாதகுறைசெய்து
அரும்பாவியாகினேனே என்மகளே
மெய்யானசேதிசொல்லக் கைகால்நடுங்குதையோ
வீணாகவாசைகொண்டே னென்மகளே
மகள்யுந்தனைவேண்டி வெகுநாள்தவமிருந்தேன்
வாயில்மண்சாற்றினையோ என்மகளே
ஜெகமெலாந்துதிசெய்யச் செல்வியுனைவளர்த்துச்
சீருங்குலையலாச்சே என்மகளே
எப்போதென்னைக்கண்டு செப்புவாயம்மாவென்றே
யிறந்தாயோஎன்னைவிட்டோ என்மகளே
தப்பாதமொழியுள்ள வொப்பொருவரில்லாத
தங்கச்சிரோன்மணியே என்மகளே

பஞ்சரத்கினப்போலச் சஞ்சலந்தீர்க்கவந்த
பைங்கிளியேயென்செய்வே னென் மகளே
வஞ்சகஞ்செய்ததெய்வம் நெஞ்சில்நினைக்கதுவே
வயிற்றிலெரியுதையோ என் மகனே

இதுவுமது விருத்தம்.

என்னிடமகளேவையோ வெப்படி துணிந்திருப்பேன்
வுன்னிடவடிவுக்கொப்பா யுலகினிலொருவர்காணேன்
மண்ணுமிவ்வுலகளித்த மாதாவென் றுனைபூசித்தேன்
அன்னையென்வாயில்மண்ணை யறைந்துநீமறைந்திட்டாயோ.

வசனம்.

ஆ ஆ என துசெல்வமே என்னைவிட்டுநீ எப்படிமறைந்தாய் ஐயோ கோடிசந்திர ரூபலாவண்யம்போன்ற உனது தனத்திற் கிணையான் பெண்கள் எவ்வுலகினுங் கிடையாரே கடல்சூழ்ந்த யிவ்வுலகனைத்துக்குந் தாயாகவென்று உன்னையான் பணிந்துவந்த குறைதீர உனக்குச்செல்வியாகத் தோன்றியும் எனதுவாயில் மண்ணைப்போட்டு மறைந்தாயோ மகளே.

இதுவுமது-புலம்பல்-தரு-இ-ம்.
கண்ணிகள்.

ஐயோமகளேயெந்தன் மனதெப்படி துணிவே
னரும்பாவி யாகினேன் ஓ தெய்வமே
பொய்யாமுலகவாழ்வை மெய்யென்றுநம்பியுன்னை
பூசித்துவந்த னம்மா ஓ தெய்வமே
கங்கைக்கறையிலுந்தன் காட்சியெனக்களித்தே
கணத்தில் மறைந்தாயோ ஓ தெய்வமே
இங்கிதஞ்சேருன துமழலைச் சொல்லைமண்மீது
யென்றுநான் கேட்பேனம்மா ஓ தெய்வமே
கோடிசந்திரபிம்பம்போற் குலவுமதிமுகத்தை
கொடும்பாவி யென்றுகாண்பேன் ஓ தெய்வமே
மெய்யழகினைக்கண்டால் மேதினிமயங்குமோ
வினையேனினியென் செய்வேன் ஓ தெய்வமே
உய்யவெனதுகுல முருவத்தைக்காட்டியிப்போ
வோடிமறைந்தனையோ ஓ தெய்வமே
செய்யும்வகையறியேன் சிற்றிடையாயடியேன்
சிந்ததைநைந்து மாண்டாயோ ஓ தெய்வமே

பொதுவிருத்தம்.

வேதநாயகியின் துக்கம் விப்பிரரெவருங்கண்டு
சீதமென்கங்கைநாடிச் செல்வியதனைகாணுது

யேதினிசெய்வோமென்று யேங்கியேனக்குவந்து
கோதிலாள்பாரில்வந்து கூறுவாளுண்மைதானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம்வேதநாயகியம்மன் புலம்புவதைக்கண்ட அன்னவள் மணாளரும் சிலபிராமணர்களுங்கூடிக் கங்கைக்குச்சென்று நீரிலிறங்கியெங்குந் தேடியுங்காணாது யினியென்செய்வோமென்று யேங்கி மனக்குவந்து குற்றமற்ற கோதையிடம் கூறுவார்.

வினாவிடைத்தரு-இ-ம்.

கண்ணிகள்.

ஆசைக்கினியவளே	பெண்ணரசே-நாமு
மரும்பாவியாகிவிட்டோம்	பெண்ணரசே
மாதிலாத்தேவியரே	பெண்ணரசே-இனி
வாடியழுதாலுண்டோ	பெண்ணரசே

விடை.

வரும்விதியறியேனெந்தன்	மணவாளா-இந்த
வகைக்கினியென்னசெய்வேன்	மணவாளா
தெருவில்விளையாடவந்தாள்	மணவாளா-செல்வி
தெரியேனொளித்தவிதம்	மணவாளா

வினா.

அறியாதபாலகியாள்	பெண்ணரசே-யொளித்த
தாறிவார்மண்மீது	பெண்ணரசே
தெரியாமல்வேதைகொண்டால்	பெண்ணரசே-இதுவுந்
தெய்வச்செயலென்றேசகிப்பாய்	பெண்ணரசே

விடை.

களிதெப்படியிருப்பேன்	மணவாளா-எந்தன்
கண்ணுற்பிணத்தைக்காணாமல்	மணவாளா
ஒளித்தமகளினுசை	மணவாளா-எந்தன்
உயிர்போனுலொழியுமையா	மணவாளா

வினா.

ஐயோயிதுவிதியோ	பெண்ணரசே-நமது
அருமைக்கிளிமகளோ	பெண்ணரசே
ஒய்யாரமாய்வளர்த்தோம்	பெண்ணரசே- இனிமே
லொருத்தாலுங்காண்பதுண்டோ	பெண்ணரசே

விடை.

காண்பதுண்டோவென்கிறீர் மணவாளா-அவளைக்
காட்டிக்கொடுக்கவிருந்தேன் மணவாளா
வீண்பழியேற்றுக்கொண்டோம் மணவாளா-இதுவும்
வேதன்விதித்ததமையோ மணவாளா

வினா.

உத்தமிபோனவகை பெண்ணரசே-நாமும்
ஒருவகையுங்காண்கிலோம் பெண்ணரசே
செத்தவர்வருவதுண்டோ பெண்ணரசே-உந்தன்
சிந்தைகளித்திருப்பாய் பெண்ணரசே

விடை.

சிந்தைகளித்திருப்பேனோ மணவாளா-எந்தன்
சித்திரத்தைக்காணுமல் மணவாளா
இந்தஜலத்தில்வீழ்ந்தே மணவாளா-நானும்
பிறப்பேனிது உண்மைகாண் மணவாளா

மறையவள்சொல்-விருத்தம்.

சீருலவும்பெண்ணேயிக் கதையைக்கேளாய்
சேணுலகில்மருமகப்பால் மாமிதந்த
மோரோடுமோராக்க நீர்கலந்து
முற்றுமதைவித்தவளும் பொருளைச்சேர்த்தே
தாராளமாய்ச்சொந்த பணத்தைகொண்டு
கரியிடைபாடகஞ்செய்து காலிற்பூண
நீரோடுவொரு மோரோடுகானும்
நேர்ந்தகதைபோலெனக்கு நிகழ்ந்திருயே.

வசனம்.

கேளும்பெண்ணே பிராணநாயகியே ஒருதேசத்தில் கெட்டிகாரியென்னும் ஓர்யிடைச்சியானவள் முத்தியென்னும் தனதுமருமகளிடத்தில் நாள்தோறும் ஒருபணம் அறைபணத்திற்கு மோரைவிலையிட்டுக்கொடுத்து விற்பனைசெய்து வரும்படியாக அனுப்பிவைக்கும்போது அவள் அப்பதிக்குமேற் பாலாகத்தோன்றும் ஆற்றுக்குப்புறம்பாய் விற்கப்போகிறவள் அந்தமோரிலே இடைக்கிடை ஜலத்தைக் கலந்துக்கொண்டு விற்பனைசெய்துவந்த பணத்தில் பாதியை மாமியார் வசத்திற்கொடுத்துமற்றபாதிபணத்தை சிலவுசெய்யாமல் பத்திரப்படுத்திவைத்து முப்பதுரூபாய் சேர்ந்தவுடனே அதைமாமி

யாரிடத்தில் கொடுத்து மோரிற்றண்ணீர்கலந்த சங்கதியைச்சொல்லமாமிகளித்துத் தன்னிடங்கொடுத்த ரூபாய்முப்பதுக்கும் பாடகஞ்செய்து மருமகளதுகாதுக்குத்தரிக்க அவள் அப்பாடகத்தோடும் மோர்விற்பனைசெய்து வருங்காலத்தில் ஓர்நாள் ஆற்றில்ஜலம்பூரணமாய்ப் போகும்போது இவளணிந்திருக்கும் பாடகம்விடுபட்டு ஆற்றில் நழுவிவிட்டமையினு லனைக்கரை யேறினபின்கண்டு விசனமுற்றவளாய் ஒற்றைபாடகத்தோடும் மாமியிடம் வந்துசொல்ல அதற்கவள் அடிமருமகளே மோரோடேவந்தது காலோடேவந்தது நீரோடேவந்தது ஆற்றோடேபோயிற்று அதற்குநீ அழலாமோவென்றுதேற்றி ஆதலால் அதுபோல் நீராலேவந்தபிள்ளை நீரோடுசெலந்துவிட்டதென்று மனத்துணிவுகொண்டு ஸ்நானஞ்செய்துவிடுவாய் எனது உயிர்த்துணைபோன்ற பிராணநாயகியே.

கந்தார்த்தம்.

வேதனையுற்றவாடும் வேதநாயகியைத்தேற்றி
மாதர்கள்பிடித்துக்கொண்டு வந்துமேஜலத்தில்மூழ்கி
சூதகக்கழிபக்கூந்தல் தூங்கிபின்னெறிந்துநோக்க

காதலாய் நடுஜலத்தில்

கங்கையுநின்றாள் மகளைத்தாயுப்பொங்கமாய்க்கண்டாள்
எங்கெக்குந்துதித்திட அங்கப்பளபளென்ன
திங்கணமுகமிலங்கத் தங்கச்சிரோன்மணி கங்கையு

வேதநாயகிசொல் விருத்தம்.

வேதமொழிசெவிடனுக்கு வுரைத்தாப்போலும்
விழியில்லான்கண்ட வியன்மணியைப்போலும்
ஆதவனைமுகிலினங்க ளடார்ந்தாப்போலும்
அக்கினியைவெள்ளநீரான் மறைத்தாற்போலும்
மாதவமேசொல்லியதால் வந்தவுந்தன்
மகிமைதனையாரறிவார் மண்மேலோங்கும்
மாதவையாதரித்துக் காப்பாயுந்தன்
பாதாரவிந்தமலர் போற்றிபோற்றி.

வசனம்.

ஆ ஆ உலகின்கண் ஒக்கும் செவிடர்களினது செவியில் வேதவாக்கியங்களை போதித்தவைபோலும் பிரவிக்குருடனுக விருப்பவனுக்கு உயர்ந்த ரத்தினங்கள் கிடைத்தவைபோலும் சூரியனை அடர்ந்

துமறைந்த மேகக்கூட்டங்களைப்போலும் நீர்பூத்தநெருப்பைப்போலும் மாதவமே யோர்வடிவாகிச் செல்வியைப்போல் வந்தவுனதுமகிமை இவ்வுலகில்வாழும் மாந்தர்களா லறியக்கூடுமோ ஆதலால்பாதகர்களிய யெங்களை யாட்கொள்ளும்படியாய் உனது உபயபாதாம் புயங்களுக்கு வந்தனம் வந்தனம்மா.

இதுவுமது தரு-இ-ம்.

பல்லவி.

தஞ்சமும துபாத மஞ்சலிசெய்தனம்
தாயேசரணமம்மா தஞ்ச

அநுபல்லவி.

அஞ்சுகமேபடியரிருடியரிருவினை கலகல
வருட்காப்பாயோதுங் காலகாலந்தகி

சரணங்கள்.

நீலங்காதரி நிறைந்தபஞ்சாட்சரி
நிகிலபுவனி நீயே
சூலிபரஞ்சோதி மகவையாகிவந்த
சுந்தரியுனையன்றி வேறில்லையாதலால் தஞ்
உன்னைத்துதிப்பவர்க்கு வோதும்வினைகளேது
வோய்நமோ நாராயணி
பொன்னேகரகபாலி புகலுஞ்சடாட்சரி
புநிதசுரகமலம் பொருந்திநிற்குஞ்செந்தேனே தஞ்
என்னமாயஞ்செய்தா யுன்னைத்தேடியெல்லோரும்
யிரங்கினேம் சுகுணகரி
தன்னேரிலாப்பொருளா யோங்குந்தயாபரியே
தற்காப்பதுன்பாரம் பார்மிசையம்மணி தஞ்

கெங்கையம்மன், வேதநாயகிக்குச்சொல்

அகவல்.

தஞ்சமென் றுரைத்த தந்தையர்கேளே
அஞ்சவேண்டாமடியளின்வரலா
றியம்புவேன்கேளு மிப்புவியதர்மம்
பொய்யொடுசூதும் புகலொணக்களவும
மிஞ்சியிருப்பதால் மீதலமதனில்
காமிகளாலே காலனுக்கதிக
வேலைகள்மிஞ்சி விதியுடனுரைக்க
பாலைக்கிழத்திபின் பண்டனுமீசன்

தண்டனுரைக்கச் சதிர்கொளுமணாளன்
என்னிடமுறைதந்த வெழிலுடைகொண்டே
கங்கைநாளுங்கள் கவலையைதீர்க்க
பொக்கமாய்வந்தேன் புத்திரியாகி
இனிப்பூமியிலெங்கும் விறைந்தே
தனியாய்வகைகட்டி தண்டித்துஷ்டரை
அன்பறைக்காத்து வடையவேசொர்க்கம்
இன்பமாய்த்தந்து யேமனுக்களிக்கச்
செய்திடவந்த சேயிதம்பா
தெய்வமாயென்னைச் சிந்தித்துவந்தால்
ஒவ்வொருகால முங்கள்முன்வருவேன்
செவ்வையாய்நீங்கள் சிறப்புடன்வாழ்வீர்
நற்கதியடைய நல்வரந்தருவேன்
மைக்குழல்தாயே மனைக்கேகுவாயே.

பொதுவிருத்தம்.

வரம்பெற்றதந்தைதாயு மலரடிப்போற்றிசெய்தே
வரம்பெற்றுமனைபைகாடி யுளமகிழ்ந்திருக்கும்போது
தரம்பெற்றுக்கொள்ளவேண்டித் திருமலைவேங்கடேசன்
நிரம்பெற்றசரணமுன்னி நிகரிலாத்தபஞ்செய்வாளே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கெங்கையம்மனிடத்தில் பெறுதற்கரிய வரங்களைப்பெற்ற வேதநாயகியம்மனும் அவர் மணாளனும அப்பூவையின் பாதகமலங்களுக்கு அனேகவந்தனஞ்செய்து மனமகிழ்ச்சியோடும் தங்களுடைய இல்லரத்திற்சேர்ந்து வாழ்ந்துவருங்காலையில் ஜகதீஸ்வரியாகிய கங்கைதனக்குத் திரம்பெற்றுக்கொள்ளவேண்டி வடவேங்கடமென்னும் திருப்பதிமலையில் அஷ்டாக்ஷரப்பொருளாய் வழங்கும் வெங்கடாசலபதியினது செந்தாமரைக் கமலம்போன்ற இணையடிகளை மனத்திலிருத்தித் தபஞ்செய்கின்ற விதங்காண்க.

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

வேதமுடிவில்விளங்கியசோதியே ஆதிமூலா
பண்ணவர்களுக்கிருகண்ணாய்விளங்கிய ஆதிமூலா
ஆதிமூலமெனறவானைக்கருள்தந்த ஆதிமூலா
அடிமுடிகடுவில்லலறுதியாகிநின்ற ஆதிமூலா
சீரோங்கும்படியின்றசெகமெலாஞ்சிருட்டிக்க ஆதிமூலா
சிந்தைகொண்டேவிதியையுந்தியில்வரச்செய்த ஆதிமூலா

மட்டற்றசெனங்கள்மண்மீதுதிக்கச்செய்தா ஆதிமூலா
மன்மதரூஜனைமைந்தனாகத்தந்த ஆதிமூலா
பாவவிமோசனாஜீவனந்தழைத்திட ஆதிமூலா
உந்தன்பதத்திலெனைத்தந்தபராபரா ஆதிமூலா
தேவருங்காணத்திருடிநான்காண ஆதிமூலா
திருமலைகளைவிட்டுவருவாய்மனமிறங்கி ஆதிமூலா
ஓரடியாலிந்தவுலகத்தையளந்தவா ஆதிமூலா
பக்ஷமாகஜெயபரட்சகனேவருவாய் ஆதிமூலா
பூதகிபாலுண்டநாதனேயிவ்வேளை ஆதிமூலா
சிறியாள்செய்தவத்திற்குச்சீதரவருட்செய்யும் ஆதிமூலா

இதுவுமது. விருத்தம்.

சங்குசக்கரகோதண்ட கெதைவாளேந்துந்
தனிக்கெருடன்மீதேறி முனிவர்சூழச்
சிங்காரஞ்சேரட்ட மீன்கள்நாதா
செகந்துதிக்குங்காசாம்பு வண்ணாவேழை
பங்காளபாரளந்தபாதங்காணப்
பார்வதியாள்சகோதரனே பட்சமாக
மங்காமற்காத்தருளு மாலேயுந்தன்
மலரடிக்குகெருகோடி சரணஞ்சாமி.

இதுவுமது விருத்தம்.

ஆதியாயனாதியா யகிலலோகநாதனே
வேதியன்றனையளித்த வெண்ணையுண்டவாயனே
கோதிலாமதிகுலத்துக் குந்திமைந்தன்வல்லவனே
சோதியாகவென்முன்வந்து தோன்றுவெங்கடேசனே.

பொதுவசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரந் தவஞ்செய்துவரும் படியாகிய கெங்காபவானியின் தபத்திற்கிரங்கி ஸ்ரீவைகுந்தனாதனாகவும் அஷடாட்சரப் பொருளாகவும் அழகிய வெங்கடாசல பதியாகவுமிலங்குஞ் சகதீசன்வருகிற விதங்காண்க.

இதுவுமது விருத்தம்.

அருமறைமுனிவரோத வஷ்டலட்சுமிசூழத்
திருவாழிசங்கவாளுந் தெண்டுடன்சிலையுமேந்திக்

சருடவாசனமீதேறிக் கங்கையுமனங்களிக்கத்
திருமலைவெங்கடேச தேவனும்வருகின்றாரே

இதுவுமது-தரு-இ-ம்.

கண்ணிகள்.

சிங்காரகெருடனேறித் திருமலைவெங்கடேசன்
கங்கையம்மன்மகிழ்ந்திடவே தேவாதிதேவன்
கண்ணனிதோவந்து தோன்றினன்
ரத்தினமகுடமின்ன நங்கையர்கவரிவீச
பத்தர்கள்பாபவிமோசன தேவாதிதேவன்
பாராளநாதன்வந்து தோன்றினன்
ஆழிதண்டம்சங்கம்வாளும் மழுகுருவுஞ்சிலையுமேந்தி
வாழிவாழிதயன் றொத்தகதேவன்
மங்களமாய்வந்து தோன்றினன்
திருப்பதிநகரில்வாழுஞ் சீருரும்ரத்தினபூபன்
விருப்பமாயப்பணியுங் கேசவன்தேவாதிதேவன்
தேவநாதன்வந்து தோன்றினன்.

கெங்காபவானிசொல் சீசபத்தியம்.

சீதரமுகுந்தனே தேவாதிதேவனே
செழுமலர்த்தாடகடியவள் சரணமிதுவே
மாயவாவுலகோரடிக் குண்ணளந்தவா
மலரடிக்கடியவள் கோடிசரணம்
யாதவாநீமுன்பு சிலைதனைப்பெண்ணாக்கு
மாவிந்தவடிகளுக் கையாசரணம்
வேதனைதந்தவா மெய்யர்க்குமெய்யனே
விப்பிரர்கள்பூஜிதா வேணசரணம்
ஏதுகுறைபேதுபிழை செய்தபோதும்
நீதெல்லாம்பொருத்தருளுந் தேவதேவா
காதலாய்முன்வந்த கருணைமுகிலே
பாதகதிவேறில்லை பகருவீரே.

கெங்கைக்கு-வெங்கடேசபெருமாள்சொல்-விருத்தம்

பிரியாமலென்பதத்தி விருக்குங்கெங்கை
பிரமகுலபித்திரியா யுருவங்கொண்டே
பரிவாகவென்பதத்தை நாடிநீயும்
பட்சமுடன்றபமிழைக்க வன்புபூண்டன்

நெறிநின்றநீமகிழக்காட்சிதந்தேன்
நீவேண்டித்தவம்புரிந்த நிலைதானென்ன
சரியாகவேண்டியதோர் வரத்தைக்கேட்டால்
தப்பாமற்றந்திடுவேன்வாழி நீயே.

வசனம்.

கேளுமம்மா கங்கையே நீசதாகாலமும் என்னுடைய பாதங்களின்றும் நீங்காதவளாதலால் இப்போது பூமியின்கண் வேதகுலப் பெண்ணாகஜனித்து எந்தனைநோக்கித் தபஞ்செய்த காரணமியாது அதைநீ அறிவிப்பாயாகில் அவ்வாறேவரமளிப்பேனம்மாகங்கையே

கெங்கையம்மன்சொல் விருத்தம்.

அசுத்தனேநீரறியா துலகிலுண்டோ
வரனுடையகபடனைக் கொண்டுவந்தேன்
நச்சரவத்தோன்மகிழும் நாதாகேண்மோ
நானுமிந்தவுலகமெலாஞ் சஞ்சரித்தே
அச்சமிற்றேவதையாதி பிணிகளெல்லா
மடங்கியெந்தன்சொற்படிக்கு நடக்குமாகில்
கொச்சயுள்ளமானிடர்க ணன்மைதீமை
கொண்டவர்களெனைத் துதிக்கவருட்செய்வீரே.

171392

வசனம்.

கேளும் வெங்கடாசலபதியாகிய பகவானே அகிலசராசரங்களுக்குண்டு நீரறியாதசெய்கையுமுண்டோ பேதையாகியயான் ஸ்ரீகைலாசபதியாகிய பரமசிவன் கட்டளையின்படி இவ்வுருவங்கொண்டுபூலோகத்திலுள்ள துர்த்தேவதைகளையும் வல்வினைகளையும் என்கைவசமாக்கி அக்ரமமிருக்கு துஷ்டரைக்காத்தும் எமனுடையதொழிலுமிஞ்சவொட்டாமலடக்கியும் இப்புவனமுழுதும் என்னைகொண்டாடும்படி வேண்டிவந்தால் அதுபோலகடாக்ஷம் வைத்தருளவேண்டுந்தேவனே.

வெங்கடாசலபதிசொல்-தரு-இ-ம்.

வினாவிடை-கண்ணிகள்.

தடையில்லாவரந்தந்தேன் கங்கையேநீயும்
சற்றுமஞ்சவேண்டாந் தங்கையே
நெடியவகிலமெங்கும்படியச் செலுத்துங்கீர்த்தி
நிலைநாட்டியுன்னெடியுல கெங்குமிருந்திடத் — தடை

வினா.

நல்வரம்பெற்றேனே மாதரை-இனி
வில்வலிதந்திடுவாய் யாதவர்

செல்வமிருக்கிடுந் திரவியருமஞ்சக்
கல்வியுள்ளோரென தேழனுக்கடிமைசெய்ய — நல்ல

விடை.

வெற்றிகொள்வாருமுண்டோ எந்தனை-உனக்கு
மெத்தவுந்தந்தேனே விண்சிந்தனை
வித்தமுமுண்பாதம் நீங்காமற்பூசித்து
பத்திசெய்யுமன்பா பாகதிக்கிடமாக — வெற்

வினா.

கண்டுயெதிர்த்தோரை வெல்லவே-இந்த
மண்டலத்தினிலகீர்த்தி சொல்லவே
தண்டொடுவேல்சூலந் தநூர்வாள்கேடயமுந
லண்டானவாயுதமுகந்து தந்தருள்வீரே — கண்

விடை.

சூலம்வேலம்புக் கூடுகள்-நல்ல
காலகண்டமுஞ்சிங்கத் தோடுகள்
மேலானவாயுத விருதுகள் தந்தேனே
காலாகாலமுமிந்த காசினிபுகழவே — சூலம்

வினா.

மூர்த்தித்துணையாகவந்திட-எந்தன்
சிந்தைத்தேறவரந் தந்திட
வந்தனருளில்லாம லுகந்திலொருவகை
யெந்தவிதத்திற்செல்லு மேசமூர்த்திதேவா — மூர்த்தி

விடை.

போர்தொழிற்செய வுன்னாலாகுமோ-எந்தன்
வார்த்தை வீணாவே போகுமோ
தீரத்துடன்புவியிற்செப்பும பிணியைத்தூண்டி
கோரத்திலஞ்சாம னீவெற்றியுனுவாய் — போ

வினா.

சக்கரமேந்தியமைசயனே-அன்பு
மிக்கயிருக்கவேண்டுந் துய்யனே
பக்குவமாயுந்தன் பாதந்துதிசெய்ய
மிக்கவினைகளும் விட்டேப்பறக்கவே — சக்கர

பொது விருத்தம்.

ஆயன்வரம்பாலிக்க வம்மனுக்கிச்சையாகி
மாயவன் துணையைக்கொண்டு வந்துசேரு ரிக்கும்போது
வோயாமல் விளைக்களோடே வுரகோபங்கள்கொண்டே
தூயவச்சிவனுல்வந்த சுரங்களையறிகுவீரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இக்கப்பிரகாரம் கெக்கையம்மனுக்கு ஸ்ரீயப்பதியாகிய வெங்கடாசலபதி வரம்பாலித்த பாண்மையைக் கொண்டு அன்னவர் துணையாற்றனியனாய்வுலகிற் சஞ்சரித்துக்கொண்டிருக்கையில பரிசுத்த பரமசிவன் அச்செய்யுளையறிந்து தனதுசடாடவியினின்றுங் கெங்கைநீலகியதன் மையாற கடுங்கோபங்கொள்ள வக்கோபங்களானது சுரவியாதியாகி உலகவாசிகளைப் பொருதுகின்ற விதங்காண்க.

இருவமது-விருத்தம்

கருக்குடன்விழியைக்காட்டிக் கால்மூன்றுங்கிரிகண்டங்கள்
பெருக்கமுமொட்டைநாக்கும் பிதிர்படவருங்காத்தில்
நெருக்கியசூலம்வேலும் நிகரிலாதத வாளேந்தி
சிருக்குடன் கங்கைமுன்னர் சுரம்வருமவகைப்பாரீர்

சுரரோய்வருகிற-தரு-இ-ம்.

பல்லவி.

சுரமிந்தவுலகத்தில் வரமுந்திரமுங்கொண்டே
பரவும்பான்மையைப் பாருங்கள்

அநுபல்லவி.

பரமனருளாலிர்தப் பாரெங்கணும்பரவிப்
பாலம்வேலம்பிண்டி ஆவலாளியுங்
கோலமார்தண்ட மேலுமின்னவே

சரணங்கள்.

சிறித்திரிகண்டங்காட்டி விறிக்கொண்டசறற்பூட்டி சுரம்
சிரத்தகோரமீட்டி விரித்தநாவைகாட்டி
அரிகண்டம்பமொக்தர் நெரிகொணடேசலித்திட
ஆருமிஞ்சவே பேருகிஞ்சிய
கோரமாகவே வீரியத்துடன் சுரம்
நடுக்கங்கொள்ளவேயாரு மெடுக்கும்புகழுங்கீர்த்தி
நாடெல்லாம்பரவிய தாடாண்மையோபூர்த்தி
துடுக்குள்ளமனிதரை யடக்ககந்திரமுள்ள
சுற்றவீரியம்பெற்றுசுரமதில்
கத்திகேடயம் பற்றிவீசியே சுரம்
காட்டித்தன்மகிமையை வாட்டியேயுலகோரைக்
கருக்காய்விழித்துமீசை முருக்கியேதோள்தட்டி
நாட்டங்கொண்டுவந்துயர் மேட்டிமையாகவே

நாடியெங்களைத்தேடிவந்தவர்
வோடிப்போகவேஜாடிவேனென சுரம்

சுரநோய் கெங்கையம்மனுக்குச்சொல் விருத்தம்.

அண்டொணுக்காலமெல்லா மகிலத்திற்சஞ்சரித்தேன்
தண்டித்துவீரங்கூறிச் சவுரியஞ்செலுத்தவாராய்
கண்டித்துவிடவேயெந்தன் கையினாலாகாதுண்டோ
துண்டித்துவிடவேவந்த சூரத்தையறிகுவாயே.

வசனம்.

ஆ ஆ பளாபளா யான் பரமசிவனுக்ஞையினாலே அகிலமெண்டிசையும் எனதுவீரியஞ்செலுத்தி வெகுநாளாய் சஞ்சரித்துவாஇப்போது நூதனமாக தெண்டித்துச் சவுரியஞ்செலுத்தவந்த நீயார் உன்னைக்கண்டிக்கவும் தெண்டிக்கவும் பராக்கிரமுண்டாதலால் எதிர்த்துவாரும் கன்னிகையை.

சுரநோய்க்குங் கெங்கையம்மனுக்குந் தர்க்கம்.

மறைகுலகங்கையம்மனடா-அடா-சைவசுரமே
மகிழ்ந்துவீரம்புகழ்ந்துபேசுராய்-அடா-சைவசுரமே-மகி

விடை.

பேசும்வீரம்பின்புதெரியுமே- ஓகங்கையாளே
பேதையேதுக்குவாதைநேருமே-கங்கையாளே-பேதை

வினா.

வாதைப்படவும்வேண்டாங்களித்துமே-ஓசைவசுரமே
வந்துபணிவாயெந்தன்பாதமே- ஓசைவசுரமே

விடை.

பாதம்பணிவாயென்றவுந்தனை-ஓகங்கையாளே
பதைக்கவதைக்கப்பாணமெடுத்தனே-ஓகங்கையே-பதை

வினா.

எடுத்தசிலையைத்தடுத்தேன்பாரடா-ஓசைவசுரமே
ஏண்டாய்வீணாய்மாண்டுபோகிறாய்-ஓசைவசுரமே-ஏண்டா

விடை.

மாண்டுபோகவந்தேயெதிர்த்தனை-ஓகங்கையாளே
மாறுச்சுரங்கள்மீறிவிடுத்தனே-ஓகங்கையாளே-மாறு

வி ஞ.

பீறிபூறிவருகுஞ் சரங்களே அடா சைவசுரமே
வெட்டியெரிவேனட்டியேதடா சைவசுரமே-வெட்

விடை.

அட்டியில்லாமலேவிட்டுசுரங்களோ-ஓகங்கையாளே
அஞ்சியோடவேமிஞ்சியடிக்கிறேன்-ஓகங்கையாளோ-அஞ்சி

கெங்கையம்மன்சொல் விருத்தம்.

அடிக்கிறேனென்றுவீணு யாண்மைகள் மிகவுங்கூறிப்
படிக்குறாய்க்கற்றதெல்லாம் படிக்கிலென் வில்லுளைத்து
னொடிக்குனன்றலையுங்கையும் நொறுக்கியேசிதறியோடப்
பொடிக்குறேனிதோமுன்பாகப் பூட்டினேன்பாணந்தானே.

வசனம்.

அடா சைவசுரமே அடிக்கிறேனென்று நீ வீணுய்க்கற்றவித்தைகளெல்லாம் வாயில்வந்தபடி பிதற்றுவதால் என்னபிரயோசனமாம் இதோபார் ஓர்நிமைப்போதில் வில்வளைத்து உனதுசுராமுங்கரங்களுஞ் சிதறிப்போகும்படியாய் கணையைத் தொடுக்கிறேன் பாரடா சைவசுரமே.

சைவசுரத்திற்கும் கெங்கையம்மனுக்கும் தர்க்கம்-தரு-இ-ம்.

வினுவிடைக்கண்ணிகள்.

உக்ரமுகபாணத்தாலே மிக்கவுந்தன்பாணந்தன்னை
வோட்டியேசமனுக் கிறைகாட்டுவேன்
திக்குசணிறைந்திடவே யக்கினிச்சுரங்கடன்னைத்
திட்டியேதனுவிற்பூட்டியீட்டிறே னுன்றனைக்கொல்ல உக்ர

விடை.

கொல்லவந்தேனுாதனேயும் நல்லதாசட்டும்
கோடானகோடிசுரங்கள் தாக்குவேனிதுவன்றியுந்
தொல்லுலகமுழுமையும் வல்லமைசெலுத்தவேண்டி
தோற்றுமஜெயங்கொண்டே சொற்குற்றனுலகேறிடவே கொல்

வி ஞ.

விட்டசுரமனுவல்லாமல் மட்டிலர்ச்சரந்தொடுத்தே
மீறிவந்துதக்கா மலேஜாடினேன்
அட்டியில்லா துன்றனேயும் வெட்டிகாளெறிந்திடவே
அமோகமாகபாணந்தன்னைத் தூண்டுறேன்பாரடாயிப்போ விட்

விடை.

என்னிடமருத்துவங்கள் தன்னேநீயறிந்திடாமல்
யேதடாவீரிய மெத்தபேசுறாய்
மின்னியசரங்களாலே பின்னமாகச்செய்வேன்
வெற்றிமொழிமெத்தப்பேசி வீசுறாய்விதிமாண்டதோ என்னி

சைவசுரஞ்சொல்லும் கந்தார்த்தம்.

கண்டஞ்சியுலகேகநேராகக் காரியமறியவேதான்
பெண்டஞ்சகிப்பேசா லிலக்கினைப்பார்க்கவேண்டித்
தண்டக்கோமரமுகவேலும் சக்கரம்வில்வாளேந்தி
துண்டந்துண்டங்களாகத்
துண்டிப்பேன்பாராய் சரங்களாலேகண்டிப்பேன் பாராய்
துண்டந்துண்டமாகவே மண்ணுடல்சிதறிடவே
சொண்டுநேரமாத்திரலே நின்றுகாண்கொடியே துண்டி

கெங்கையம்மன்சொல் கந்தார்த்தம்.

உற்றதுசொல்வேன்கேளு உன்னிடமுலைவக்காண
யித்தனேரமாக யிருசினமீரொட்டாது
பத்தியைக்கண்டறிந்தேன் பகைத்திருப்மிகவுமீறிக்
வெற்றிகள்பெறவேயுன்ன
வீரியங்கொண்டேன் வஞ்சமைபேசுங்காரியங்கொண்டேன்
மீறிவுதிரும் பிரிபிரிபெழ
விதியவினையை மாறிபோற்பொழி வீரியங்

சைவசுரஞ்சொல் கந்தார்த்தம்.

ஒப்பிலாத்தாயேபோற்றி யுலகமாதாவுநீயே
எப்படிபிழைப்பேனம்மா என்னைநீவதைக்கவேண்டாம்
செப்பியமறைகுலத்துச் செல்வியென்றுனையெதிர்த்தேன்
தப்பிதந்தனைப்பொறுத்து
தாயேநீகாரும் உனக்குரிய மாய்கையைக்கூறும்
தாயேனன்னிடமாயமுன்னுதே
வாயினுல்வாஞ்சேயனுக் கருள்தாயே நீகாரும்

கெங்கையம்மன் சொல் கந்தார்த்தம்.

இலகியகயிலைவாழி மீசனூர்சடையிலோங்கும்
பெருமுளகங்கைகானே பிராமணக்கன்னியாகி
யுலகினில்நிதக்குதெய்வ முங்களைவசப்படுத்தல்
கலகஞ்செய் துவுலகில்மாய்கை
காட்டிடுவேனே எனதுபுகழ் நாட்டிடுவேனே
காட்டிதுஷடரை வாட்டியன்பரை
நாட்டிவன்புகழ் பூட்டவந்தேன் காட்டிடுவேனே

கெங்கையம்மன்சொல் கொச்சகம்.

இன்பம்பெரும்படியா யென்னிடத்தில்நீயிருந்து
துன்பமேசொற்படிக்குக் கேட்பாயதருஞ்சுர

சுரநோய்சொல்-கொச்சகம்.

அன்பாகுமெர்காயே யாரறிவாருன்மகிமை
தெம்பாயுன்சொற்படிக்கே சேவகமுஞ்செய்திருப்பேன்.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் திருப்பதிமலையிலே மூர்த்தருளியிருக்கும் வெங்கடாசலபதியினது அருள்பெற்றிலங்குந் தொண்டைமண்டலமவள் தன்னைப்பற்றவந்தசைசுரத்தையெதிர்த்து வில்வேல்வாண் முதலிய ஆயுதங்களாற் போர்புரிந்து இன்னாந்தன்மகிமையை எடுத்துக்காட்டிய சுரத்தைத்தனை வசப்படுத்திக்கொண்டபின்னர் விஷ்ணுசுரமென்னும் வாதசுரம் வருகிறவிதங்காண்க.

இதுவுமது விருத்தம்.

மூக்காலுந்திருகண்டத்தான் மூப்பிறந்ததமோங்க
வெக்காலுமூலசமுஞ்ச விரிருகாக்கேளாடு
திக்கொருமதிசயிக்கச் சேலைவெட்டிவாணமிட்டே
சொக்கதவிழிகள்காட்டிச் சுரம்வருந்தன்மைபாரீர்.

விஷ்ணுசுரம்வருகின்ற-தரு-இ-ம்.

தொண்டிச்சிந்து

சாமிதோலருகுதுபார்-விஷ்ணு
கோதிமதிபோனுந்தத்தம் மாதர்வடிவாய்
காமதிலாயுதங்கள்-தாங்கியே
கண்டவர்கடுங்கிடவே கொண்டலடிபோல்
அதட்டியேபொறிபறக்க-மூன்றுகால்
ஆறுகாமூன்றுசிர பீறிவடிவாய்
பதட்டமாயுதட்டைக் கவ்வியாக்ரமித்தப்
பன்னுங்கடற்றிரைபோல் நாக்குகளைநீட்டி
சேலைசரிகைமின்னலே கெக்கலிகொட்டி
சித்திரபலபணிகளை முற்றுமிலங்க
காலிற்சிலம்பொலிக்கவே-விசிநடந்து
கண்ணையுருட்டிக்காட்டி-விண்ணவருஞ்ச
ஆடிமிரட்டவந்தவள் உலகந்தன்னில
ஆதிமாலருளால்வந்தவர்தசுரம்-நான்
பூரமுடிஎன்னிடவிரியம்-ஒருநொடிக்குள்
பற்றியுன்னைத்தத்தளிக்க வைத்திடவந்தேன்-தனதனத

இதுவுமது விருத்தம்.

வையமெல்லாமஞ்சும் வைணவசுரமென்றாலே
பொய்க்குபடங்கொண்டென்னைப் பிடிக்கவந்தாயன்றோ

பொய்யகத்திறமுங்கொண்டு விடுவனோவுனையிப்போது
செய்யவென்மாயன்பாதஞ் சிந்தையிற்சிந்திப்பேனே.

வசனம்.

ஆடிபொய்வேடங்கொண்டு என்னை நீ பிடிக்கவந்தா யன்றோ ஆ ஆ வைணவசுரமென்றால் வையகமெல்லா நடுங்குமென்ப தரியா யோ இதோ உன்னை எதிர்க்கிறேன் பாரடி.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கெங்கையம்மனானவள் தன்னைவந்தெதிர்த்த வைணவசுரமென்னும் வாதசுரத்தைக்கண்டு கோபங்கொண்டு வினவுகின்ற விதங்காண்க.

வினாவிடைக்கண்ணிகள்.

ஏதடிசவுரியஞ்சுரமே என்னை
எதிர்த்தாலறிகிறேனுந்திரமே
ஞாதடிநீமெத்தச் சொல்லும்வசனமெல்லாம்
சுரமாகவந்தகாரியமறிவேனடி ஏதடி

விடை.

ஆரடிநீயிங்கேவந்தாய் என்னை
யதட்டியதட்டிமொழிந்தாய்
கூறடியுன்னிடயூறும்பேருமறியக்
கொஞ்சத்தில்விடுவேனோ நெஞ்சத்திலறிகுவாய் ஆரடி

வினா.

மறைகுலந்தனில்வந்தகெங்கையானும்
வந்தேனேயுனைத்தேடியிங்கே
தரைபுகழ்கீர்த்தியுஞ்சவுரியந்தெரியாமல்
தாண்டிகுதிக்கலாமோ மூன்றுகாலால்களும் மறை

விடை.

கங்கையேயுனக்கெனக்கென்னதிரம் என்னைக்
கடித்திடச்சொல்லுமோவீரம்
மங்கையேயெதிர்த்தெனை படிந்திடக்காலமோ
மாட்டிச்சிலையதனிற் பூட்டுவேன்பாணங்கள் கங்கை

வினா.

வரிச்சிலையெடுக்கிறேன்பாரு சரா
மாரிசொரிந்திடுமின்னேரு
அரிதாகியவெகுவஸ்திரம் வருகுது
அங்கம்பதறிவாடச் செங்குருதிகளோடே வரிச்

விடை.

அடிப்பேனென்னுயிரமேது வது
வறியமற்செய்திருப்பவ ளு
அடிப்புவசனமாமோ சூத்சைக்காண வே
அன்னுக்கணையினுலே பின்னப்படவிடிப்பேன் அடி

வினா.

எந்தன்மகிமைகாணப்போமோ அடி
யென்னைசெயிக்கவுன்னாலா மோ
வந்துவினைப் வல்லாண்மைபேசு ராம்
வாட்டிவிடவேயிதோ பூட்டினேன்பாணங்கள் எந்த

விடை.

தொட்டாலுனக்கொருதீரம் வருமோ
தொல்லுலகோர்விசா ரம்
விட்டாவருஞ்சரங்கள் வெல்லவல்லமையுன் டோ
விரியப்பேசாதே காரியமுணராமல் தொட்

கெங்கையம்மன்சொல் விருத்தம்.

கனகமாரொளிவுதன்னைக் கண்ணிலான்காண்பதுண்டோ
வனசமாமலரின்தன்மை மண்டூகமறியப்போமோ
எனதுளமகிமைதன்னை வெளியில்லவறியநீயும்
வுனதுளமறியவேண்டி கொடுங்கணைவிடுக்கின்றேனே.

வசனம்.

அடி மாதவசுராமே பளாபளா மெத்தகெட்டிகாரிதான் உலகின் கண் தங்கக்கட்டியினது பிரகாசத்தைப் பிறவிக்குருட னறிவானோ தாமரையின்மணத்தைத் தவளைகளறியுமோ அதுபோல் எனது மகிமையை நீயறியமாட்டாய் உன்னுடையதிறத்தை யறியவேண்டி யானிதுபரியந்த மடங்கியிருந்தேன் இனிமேல் உன்னைத் தெண்டிக்கத் துணிவுகொண்டேன் பாரடி

பொதுவசனம்.

அகோதெப்படி யென்றால் இந்தப்பிரகாரம் கங்கையம்மன் கூறியதைகேட்ட மாதவசுரமாகிய பெண்ணானவள் மகாகோபங்கொண்டுகண்களிற் றீப்பொறிசிந்தக் கங்கையைநோக்கிக் கூறுவாள்.

மாதவசாத்திற்கும் செங்கையம்மனுக்கும தர்க்கம். தரு-இ-ம்.

விஞவிடைகண்ணிகள்.

மறைகுலப்பெண்ணே நீயாரடி நிமைக்குண்
மாய்த்துன்னை விடுகிறேன்பார டி
திரமறியாமலேசெப்புறயே தோ
சேதிக்குறேனண்டம் பேதிக்கும்படி யாகமறை

விடை.

அண்டம்பேதிக்கவும்வல்லையோ உனது
அஸ்தத்திலே சிலையில்லை யோ
கண்டதுண்டமாகக் கண்டித்தேன்வாளியா ல்
காட்டுகிறேன்கழுகுக் கிடுகிறேனுன் னை-அண்

விஞ.

கழுகுக்கிறையாகச்செய்வதும் இந்தக்
காசினிமேல்நின்றுய்வது ம்
முழுதுமரியவேமூட்டுறேன்றீ யை
முன்னின்றுபேசாதே மூடடியுன்வா யை-கழு

விடை.

வாலையமூடச்சொன்னாயே இதோ
வருகுதுபார்சூலம்பே யே
நோயாயெழுந்தவுனக்கேளிந்தகொட்ட ம்
நொறுக்கியேதண்டத்தால் முறிக்கிறேன்காங்க ளை-வாயை

விஞ கந்தார்த்தம்.

காசினிபுகழுகின்ற கங்கையுஞ்சினந்துமீறி
வீசியேவிட்டசூலம் வீழ்ந்திடவதைக்கண்டித்தே
கூசியேயவளும்வாடக் கொக்கரித்தெழுந்துநின்று
தேசிகனென்னைமெச்ச

திரமுடனேதொடுத்தே னகோரபாணம்
திரளும்பலவீரமுமஞ்சவே
பாரமாயகணைகள்கோரமிஞ்சவே திரமுடனே

விடை கந்தார்த்தம்.

சுரமென்றுனுனக்குவஞ்சகஞ் சுந்தரிணுனேவல்ல
பரமன்செஞ்சடையிற்றங்கும் பாவையென்றறிந்திடாமல்
வுறமிஞ்சிவந்தேது வுள்ளமுமபதறிடாமல்

கரமிஞ்சித்தொழுதேநிற்கக்

காட்டினேன்மகிமைபாரடி அகோரபாணம்
பூட்டிவேனமனதுதேறடி
காட்டியேயுந்தனை வாட்டியேயடக்கவே
கூட்டினேனென்கெடி நாட்டினில்நிற்கவே காட்டி

வினு கந்தார்த்தம்.

மிக்கவேசூடுகாட்டி வீரியந்தனையடக்கி
வக்கினிதன்னைமூட்டி யதஞ்செய்யநொந்தேனம்மா
வுகாகோபங்கள்கொண்ட வுன்னிடமகிமைதன்னை

கக்கிகள்போலவந்த

காரியந்தனைக்கூறுவா என்னையெதிர்த்த
வீரியஞ்சொல்லியே மீறுவாய்
காரியமேதுநீ கோபிப்பிடிக்கவே
பாரிலெந்தனை மீறியடக்கவே காரியங்

விடை கந்தார்த்தம்.

திங்களைத்தரித்தயீசன் செஞ்சடைதனிலிருக்கும்
கங்கைநான்பூலோகத்தில் கன்னிகையாகவந்தே
மங்கைஉருவுகொண்டு மானிடர்தம்மைக்காக்க

உங்களைவசப்படுத்தி

உலகில்சஞ்சரித்திடுவேன் எந்தனைக்கோற
வலுமைகள் செலுத்திடுவேன்
உலகிலன்பர்கள் நலமதுசெய்திட
பலபலதுஷ்டருஞ்சிலபிணியொடுங்கவே உலகில்

பொதுவிருத்தம்.

அறிவையின்மகிமைதன்னை யறியாமலெதிர்த்தோமென்று
பெருமையாய்ப்பிணிகளெல்லாம் பின்புசொற்படிநடந்து
வருகவேகங்கையம்மன் மகிமையையுலகிற்காட்டக்
குருகியேகாளியம்மன் கோபித்துவருகின்றாளே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஸ்ரீகைலாசபதியாகி யஉமாமயேசனது சடாடவியில் விளங்குங்கங்கையாகிய மனைகுலப் பெண்ணினுடைய மகிமையை இன்னதென்றறியாம லெதிர்த்தோ மென்றடங்கிப் பிணிகளெல்லாம்வந்து அம்மனைப்பணிந்துநிற்க அ வைகளைத்தன்சொற்படி நடக்கும்படியாய் கைவசப்படுத்தி பின்னர்

தனதுபெருமையை உலகத்திற்றெரிவிக்க அப்போது அதைக்கண்ட வடபத்திரகாளியானவள் கங்கையின்மீதுகோபித்து மகாவுக்ரத்தோ டும் வருகிற விதங்காண்க.

இரவுமது விருத்தம்.

அண்டாண்டங்களெல்லா மதிரவேயார்ப்பரித்துத்
தண்டமுஞ்சூலம்வேலுந் தனுவுடன்கரிகைபாலா
கொண்டுபொற்பணிகள்மின்ன கொடியராக்கதர்கள்பூதம்
கண்டிடவணங்கிச்சூழக் காளியுமெதிர்த்திட்டாளே.

வடபத்திரகாளிவருகிற-தரு-இ-ம்.

பல்லவி.

வந்தனளேவடபத்திரகாளி நல்ல
மகிடசங்காரித்தரிகிடதகவென
தந்தனங்கள்பாடிவர பூதங்களித்த
தாரணியில்கெடிபெற்ற நாரணியகோறி
சிங்கவாகனத்தின்மீதுபவநிட நல்ல
செகச்சோதிவாயிலங்கு மகிலகாரணி
சம்பிரமுடன்முரசரை செறித்தவளைச்
சாரிவருபேய்பூத மீறித்துடிக்க
ஆடையுபரிமளம்வீசசெப்பரிய
அண்டர்முனிவர்கள் கண்டுதுதிபேச
பாடகச்சதங்கைகள்கொஞ்ச இளைசூழும்
பாரணைந்தும்புகழ் கெடிதண்டமுமஞ்ச
தண்டமொடுவில்லும வேலும்வாளும்நல்ல
சங்காழிச்சூலமும் பிண்டிபாலமுடனே
கொண்டுசரங்களாட நல்ல
குறளிக்கணங்களெங்கும் புகழ்பாட
வந்தனளே வடபத்திரகாளி

காளிசொல் விருத்தம்.

பாவையேயச்சகற்றுப் பாரெலாம்புகழுமெந்தன்
காவலேநீயகற்றிக் கடித்திடபிணியைவிட்டு
மேவியவகைதானென்ன விடுவனோவுன்னையிப்போ
தாவியேவாளினாலே சங்கரித்திடுவேன்பாராய்.

வசனம்.

ஆ ஆ ஆாடிகன்னிகையே நெடியகடல்சூழ்ந்த இப்புவனமனைத்தையும பாதுகாத்துவரும் வடபத்திரகாளியென்று சற்றேனு மஞ்சாமல் உலகின்கண்வாழு மானிடர்களுக்கு பிணிகளைத்தூண்டி விரியஞ்செலுத்திவரும்வுன்னைஎனது விரவாளுக்கிரையாகச்செய்வேன் பாரடி.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தபிரகாரங்கூறிய வடபத்திரகாளியைப்பார்த்து கங்கையம்மனானவள் மிகவுமுக்ரத்தோடுங் கூறுவாள்.

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்.

பல்லவி.

ஏதடிகாளியென் னெதிர்நிற்குந்திறமேது
யென்னடிவகைசொல்லடி

அநுபல்லவி.

வாதுகள்செய்வதி நீதியுமல்லடி
வந்தேனேயுங்களை யடக்கியாள்வதற்கு   ஏத

சரணங்கள்.

வாட்டமுற்றோடச்சிலை மீட்டியசுரங்கள்பூட்டி
வாணாளழித்தேயுனை யோட்டுவேன்பாரடி

காளிசொல்-தரு-இ-ம்.

அச்சமில்லாமல்வந்தாய் நீயெந்தவூரடி
அறியச்சொல்லடிதந் தாய்களின்பேரடி
மெச்சியேவந்திட வச்சிதமாமோ
மீறியேபிணிகளை விடுக்கலாமோடி நீ
மீறிவுந்தனைப் பாரில்வீழ்த்திட
கூறுசெய்குறேன் பாரடியிப்போ   அச்ச

கெங்கைசொல் தரு.

நானே திருப்பதிமாமறை குலந்தனில்வந்தவள்
நாளிலமெச்சவேகெங்கை யாமெனப்பெயர்தந்தவள்
போனேனின்மதிகொண்டு யென்றனைவந்தெதிர்த்தாய்
யெதிர்க்கவுன்னாலாமோ ஏண்டி வீரியந்தந்தாய்
யிடில்லாதபலவாடலுமிஞ்சவே
தேடிவந்ததைபோ யோடிப்போடிநீ நானே

காளிசொல் தரு.

கங்கைதேவுன்னிடசவுரிய வீரியங்கண்டேனே
கங்கையேயுந்தனைப் பங்கமதுசெய்ய
நாடினேன்பாரிதோ சரங்களைசெய்ய
நாடிவந்துநீ மோடிசெய்வது
வாடிநல்லதே யோடிப்போடிநீ கங்கை

கெங்கையம்மன்சொல்-விருத்தம்.

ஓடிநீபோடியென்று னுலகெலாமுனக்குசொந்தம்
வாடிநீயுலகளந்த மாயன்றங்கையே
நாடியேபிசனோடு நாட்டியஞ்செய்தகாளி
தேடியேயதனாலித்த திறம்பேசவந்தாய்போடி

வசனம்.

ஆ ஆ ஆடி வடபத்திரகாளியே நீ இவ்வுலகையளந்த நெடுமாலுக்குத் தங்கையானதினாலும் பரமசிவமாகிய உமாமயேசனோ டெதிர்த்து வாதாடி பாதமுடையவளாலும் உலகமெல்லாம் எனக்குச் சொந்தமென்று கெர்வப்பட்டு என்னை ஓடிப்போவென்று சொன்னாயல்லவா நல்லதடி.

பத்திரகாளிசொல் விருத்தம்.

கன்னியேமறைகுலத்துக் கங்கையேசொல்லக்கேளாய்
யென்னிடவலுமையெல்லா மெவர்களோசொல்லக்கேட்டும்
துன்னியேகட்சிகூறிப் பயமின்றிபேசவந்தாய்
சின்னபின்னங்களாகச் செய்குவேன்பாராய்வாடி

வசனம்.

ஆ ஆ அடிபாரடி கங்கையென்னும் பெயருடைய பிராமணப் பெண்ணுகையால் எனதுவல்லமையை உனக்கு எவாகளோ சொல்லக்கேட்டு இகட்சிபாய்பேசவந்த உன்னைசின்னபின்னப் படுத்துவேன்பாரடி.

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

நீண்டசிலைதன்னைவளைப்பேன் காளிகையேயான்
வேண்டியசரங்கள் தொடுப்பேன்
கோரச்சரங்கள்பூட்டி மாறுமதைப்பூட்டி
வாறுதயிடர்காட்டி மீறுமதுன்னையோட்டி
நீட்டியேயெனதுவீரம்பூட்டியே மோகச்சரங்கள்
மீட்டியபம்பரம்போலே யாட்டியுனைத்தண்டிக்க நீண்ட

கண்ணிகள்.

வில்லெடுத்தேவந்து குதித்தேன்கங்கையடியன
வல்லமையறிய யெதிர்த்தேன்
வெற்றிபூதங்கள்பாடவே யெத்திசைகளும்பாடவே
பத்திகளைச்சாடவே தத்தளித்துவோடவே
பாராடியுலகந்தன்னி லாரடியென்னைவெல்வது
கூரடியுயிர்பிழைத்துத் தேறடிபுவியின்மீது வில்

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

சந்திரமுகபாணமெடுத்தேன் அகோரமாக
வந்துவுந்தன்மீது கொடுத்தேன்
தாடாண்மைகளுமோதவே வாடாமுகம்வாடவே
கேடாதவகையாடவே வோடாமல்மனம்நோகவே
தேடவும்செயமங்களம் காடவும்பூதங்கள்நொந்து
வோடவும்வுக்ரமிகுத்து ஜாடவுஞ்சினத்துமீறி சந்

பத்திரகாளிசொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

தண்டாயுதந்தன்னையெடுப்பேன் சுழன்றெழும்பி
மண்டியிட்டுமோதியடிப்பேன்
தாவியேமனதுகூச தேவருந்துதிகள்பேச
பூவிலயன்றன்னையேச வாலவாய்வாட்கொண்டுவீச
தத்தவுந்தலையைக்கழு கொத்தவுங்காகங்கள்வந்து
கொத்தவுமகைகள்தேட மெத்தவும்கோபமிகுத்து தண்

கந்தார்த்தம்.

அடிக்கடிபாணம் நொடிக்குளேயேவி
மடக்கவேயுன்னை :

பொடிக்குதேன்பாராய் சிதறிவோட அடிக்குதேன்பாராய்
வடிக்கணைதொடுத்து வருகுதுபாரடி
கொடிக்குள்ளேயுந்தனை படிக்கவிரியமுண்டு
நோக்கியேமிஞ்சிப் பார்க்கிறுயென்னடி
யேற்கவேயென்னவஞ்சத் தீர்க்குதேன்முன்னுடி
நோகநோகவே வேகநெஞ்சமும்
போகவுன்னுயிர் சாகச்சாடுவேன் போடி

இதுவுமது.

பொறுக்குமாவீரம் சுருக்குடன்பேச
கருக்கெனத்தலைவை
அறுக்கிறேன்போடி பொடிபொடியாய் நறுக்கிறேன்வாடி
பொருக்காகவிரிடச் செருக்கையறிவேண்டி
மூக்கிக்குலுக்கியே திருப்பிப்பேசவந்தாய்
மூட்டுறாய்வீரத்தைக் காட்டுராயென்னடி
தீட்டுராய்தலைதன்னை யாட்டுராய்வாதாடி
முட்டமுட்டவே விட்டசாமதை
தட்டியுன்றனை வெட்டியெறிகிறேன்

இதுவுமது.

சத்திசாமுண்டியே மெத்தவேவீரங்கள்
பெற்றவளென்றநீ
வெற்றிக்குவந்தாய் பூட்டினேன்பாணம் இத்தோடேநேர்ந்தாய்
அத்தனோடாடிடஞ் உற்றசெருக்காலே
தத்திருத்திக்காதே மித்தியுனக்கிது
சஞ்சலமின்றியே யுஞ்சுராய்பாரடி
யென்சொல்லுவேன்வீரம் வஞ்சினுடி
சாநீவேனுன்னைமூடுவாய்விழி போடியிப்பவேதேடுவாய்வழி

இதுவுமது.

அந்தணப்பெண்ணே யெந்தனையெதிர்க்க
உந்தனுலாமோ
நொந்திடச்செய்வேன் நமனைத்தேடி வந்திடச்செய்வேன்
உந்தனைமடிக்காதே வந்திடும்பாவங்கள்
அந்தவிதத்திற்கே சிந்தைநொந்திடவேண்
யுள்ளத்தில்நீசஞ் கொள்ளாதேகன்னியே
துள்ளத்துள்ளவே தலை தள்ளுவேனுன்னையே
ஓதவோதவேவாதநேருமே காதகாதமேயோடவாட்டுவேன்

171392

கெங்கையம்மன்சொல் விருத்தம்.

சங்கரனையெதிர்த்தாடுக் தகையோனென்றுந்
    தாழ்விலாமகிடனைச் சங்கரித்தாளென்றும்
மங்கையுநீயுமாயனுக்குத் தங்கையென்றும்
    வரிசையுடவாயிரமாஞ் சிரத்தாளென்றும்
மெங்குமிரண்டாயிரமாங் கரத்தாளென்று
    மியம்பிடுவார்த்தைக்காக விருந்தின்னேரம்
கங்கையுநான் தங்கிமனம் பொறுத்துக்கொண்டேன்
    காணலாமெனவடிவைக் கடிந்துபாரே

வசனம்.

ஆ ஆ பளாபளா நன்றாயிருக்கிறது ஓகாளியே உன்னை ஸ்ரீ கைலாசபதியாகிய பரமசிவனோடு எதிர்த்து நடனஞ்செய்த மேன்மையுள்ளவளென்றும் தேவர்களுக்கு யிடர்செய்துவந்த மகிடாசூரனைச்சங்கரித்தவளென்றும் மங்கையாகியநீ ஸ்ரீவைகுந்தநாதனென்றும் மாயவனுடைய சகோதரியென்றும் அழகிய ஆயிரஞ்சிரமும் இரண்டாயிரங்கரங்களையு முடையவளென்றும் இயம்புந்தன்மையால் இதுபரியந்தம் மனம்பொறுத்துக் கொண்டிருந்தேன் இனிமேல் எனது வலுமையைக்காணலாம் நில்லடி காளியே

பத்திரகாளிசொல் விருத்தம்.

தந்தசொல்லதுமெய்தான் தடைபடாக்காளிதானே
அந்தணர்குலத்தில்வந்தவரிவைநீயாகையாலே
எந்தகாரியமுடிப்பா யெப்படிதுணியுஞ்சிந்தை
வந்தநானுன்னைக்கொல்ல மனதில்லாசமர்செய்தேனே.

வசனம்.

ஆ ஆ வாராய்கங்கையே நீகூறியவிதமெல்லாஞ் சரியேஅப்படிப்பட்டபராக்ரமமுடைய யெனக்குபிராமணகுலத்தில் ஜனித்தவுன்னைக்கொல்லுவதும் வெல்லுவதும் பெரியகாரியமல்ல ஆனதால்உன்னால் என்னநடத்தக்கூடுமென்றும் உன்னைக்கொல்லலாகா தென்றும்மனத்தளர்வுகொண்டு எனதுவீரத்தைக் காட்டாமலிருந்தேன் இனிவொருகை பார்த்துவிடுவோம் கங்கையே.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கங்கையம்மனானவள் வடபத்திரகாளிகூறிய வீரவார்த்தையைக்கேட்டு அதியுக்ரங்கொண்டவளாய் அடிகாளியேபாரடி யுன்னுண்மையை யறிகிறேனென்

௯ ஒருவர்க்கொருவர் வீரகேசரியைப்போல் கெற்சித்து சமர்செய்யும் விதங்காண்க.

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

பாரடிகாளியேநீயே யுக்ரமித்துப்
பாரடிகாளியேநீயே
பாரடியுந்தன்மீதிப்பே வீரமாச்சரந்தொடுத்தே
பம்பரம்போலாட்டி விடுவேன் மாரிபோற்கணை
தென்புடனேபூட்டிடுவேன்
பக்குவமதரிந்திடா வுக்ரமுகக்காளிகையே
மிக்கவேஎன்வாளிகளாற் செக்கைசெக்கையாகச்செய்வேன்

பத்திரகாளிசொல் தரு-இ-ம்.

கண்ணிகள்.

ஏதடிகெங்கையேவல்லமை அடியுனக்கு
ஏதடிகெங்கையேவல்லமை
யேதடியகோரமாக வாதுகள்செய்யவேவந்தாய்
யீடிலாச்சரங்கள்தொடுத்தேன் பயமிகுந்தே
யோடவதிவுக்ரமடுத்தேன்
வெட்டியேமன்பதிக்கு அட்டியில்லையுனக்கேற்க ஏதடி

கெங்கையம்மன் சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

நேரமாமோவுந்தனைவெல்ல அடியெனக்கு
நேரமாமோவுந்தனைவெல்ல
நேரமாமோவுந்தனைவெல்ல கேந்திரமாகவந்தெதிர்த்தேன்
நீண்டசூலந்தன்னையெடுப்பேன் உக்கிரங்கொண்டே
தாண்டிவந்துன்மீதுவிடுப்பேன்
நேசமுமுன்மீதுனைத்த - பாசமுமகற்றியிதோ
வீசியேயென்கைதெண்டாலே தூசுபோற்பதக்கச்செய்வேன்

பத்திரகாளிசொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

என்னமாயமோநீசெய்குறாய் அடியம்மம்மா
பேதுமாயமோ நீசெய்குறாய்

என்னமோமறைகுலத்துக் கள்ளியென்றிருந்தேனம்மா
யெந்தனுலகுமோவெல்ல கங்கையேயீயும்
வந்தவகைதனைச்சொல்லவே
யின்பம்வைத்தருளுமம்மா வும்பர்புகழ்நாடகியே
சம்பிரமத்தோடேந்தன்கீர்த்தி யிகந்தனிலறிந்திடவே என்

கெங்கையம்மன்சொல் விருத்தம்.

ஆண்டகைக்கடவாழென்னை யக்ரமந்தன்னைப்போக்க
வேண்டியேவந்தயேமன் வேலையைக்குறைக்குமாண்மை
நீண்டவேலேத்துங்தேவி நீமகிழ்ந்துதவிசெய்யத்
தாண்டிநீவருகுவாயேற் றருநிவேதனஞ்செய்வேனே,

வசனம்.

வாருமம்மா காளிகாதேவியே இப்பூமியின்கண் அக்ரமங்கள்மிகுந்து அந்தகனுக்கு வொழிவில்லாமற்றொழில் மிஞ்சியதால் அவன்னனதுநாயகனாகிய பரமசிவனிடத்தில்வந்து முறையிடஅவர்சடாடவியி லிருக்குமென்னை அக்ரமங்களையகற்றிப் புண்ணியத்தைப்பெருக்கும்பொருட்டு விடைதந்தனுப்ப அதுபோலயான் வளர்ந்தவளாதலால் எனதுசெய்யுளை அறிந்தநீ இன்றுதுவக்கியெனக்கு வுதவியாகவிருப்பாயாகில் உனக்குவேண்டிய நிவேதனங்கள்செய்து வருவேனம்மா காளியே.

பத்திரகாளிசொல் விருத்தம்.

திரையெறிகடல்சூழ்வெய்த திலகுநற்கங்கையாளே
விறைசெறிகயிலைவாழும் வித்தகன்விடையையேற்றித்
தரைபுகமேசங்கவந்த தயாபரியாகுமுந்தன்
வுரையதுபோலநடப்பேப னுத்தமிமகிழ்கொள்வாயே

வசனம்.

ஆஆநெடியகடல்சூழ்ந்த இப்புவனத்தில் கண்ணோக்கும் கங்கையே தேவர்முதலியயாவராலும் புகழத்தக்கஸ்ரீகைலாசகிரியில்வித்தகனாகிய உமாமயேசனது விடையைக்கொண்டு இத்தரைமீதில் விளையும் இருகூட்டம்போன்ற பாறங்களைபருதி முன்பனிபோல் விலகச்செய்துபுண்ணியத்தை விளைவிக்கும் பொருளால் விளங்கும் தயாபரியாகியவுனது உரையைப்போல் நடந்துக்கொள்ளுவேனாதலால் சித்தங்களிப்பாயம்மா வுத்தமியாகிய கங்கையே

பொதுவசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் மகிடாசூரசங்காரியாகிய வடபத்திர காளியம்மனனவள் கெங்கையம்மனுக்கு கைவசமாகியபின்னர் உலகரட்சகனாகிய ஐயனாரப்பன்வருகிறவிதங்காண்க

ஐயனாரப்பன்வருகிற பொதுவிருத்தம்.

மலையகனன்மலைமுதடுத்த வாதிவாயன்
  மதியணியும்பரமசிவன் மகிழுஞ்செல்வன்
சிலைபிடித்தவயிராணி மாணக்காத்த
  தீரனவன்பொற்பணிக ளலங்கரித்தே
கலையணியும்பளபளென மாதர்சூழக்
  கரிபரிமஞ்சனிகூத்தர் வணங்கிநிற்க
அலைகடல்சூழுலகமெலாந் துதித்தேபோற்றி
  யையனாரப்பனுமே வருகின்றாரே.

இதுவுமது தரு-இ-ம்.

பல்லவி.

அகிலத்தில்புகழ்பெற்ற மிகவெற்றிமணிசித்ர
அரிஹரபுத்திரர்வந்தார் மிகுபொற்புள — அகி

அநுபல்லவி.

இகல்பொருதுந்தோளணி நிகரிகலெனக்காதி — ல்
ஈரெண்டுகுண்டலமெழிற்சொளார — மூந்
திரண்டமாமணியுருண்டசைந் — திட அகி

சரணங்கள்.

நீண்டஜடாமகுட நெடியகற்கடகமின் — ன
மிகரிலாப்பணிஜொலிக் — க
ஆண்டவன்றனைத்தானை வேண்டித்துதிக்குமன்பர்
அடுகைடுக்காய் நடக்கவீரர்க — ள்
படிக்கபூரிபேரியடிக்கத்தொனியுட — ன் அகி

அஞ்சலியஸ்தர்களாக மஞ்சனிகூத்தரு — ம்
ஆனைசேனைநடக்க — வே
என்சொற்படியல்லாமல் மிஞ்சிவந்தொருகன் — னி
இதக்குமுள்ளவன்துதிக்கானிட — ர்
எதிர்க்கும்வீரியம் வதைத்துப்போக — வே அகி

வில்லம்புகேடயமும் வீரவாளாயுதமு — ம்
விருதுக்கொடியறக்க — வே
கொல்லும்கரஞ்சாலை துலங்கிவுலாவும்வாச — ன்
சூரரெவரையுதுறிப்பொடிப — ட
கூறுசெய்திடுக்திரவீரிய — ன் அகி

ஐயனாரப்பன்சொல் விருத்தம்.

கதிர்த்ததோளுடையகாவர்க் காரனேசொல்லக்கேளாய்
யெதிர்த்தவிரியர்கடம்மை யிமையினிற்செயித்துவாட்டி
மதித்துமேமெலிகொண்டிந்த வையகமெல்லாமஞ்சித்
துதித்திடுஞ்சூரவீரதுரை தனையழைத்துவாராய்

வசனம்.

அடா திணிந்ததோள்களையுடைய காவற்காரனே எதிர்த்தவீரர்களை அஞ்சும்படியாக ஆக்ரமித்துபெலிகொள்ளும் பராக்ரமசாலியான வீரப்பதேவனை அழைத்துவாரும் பிள்ளாய்.

வீரப்பதேவன் வருகிறவிருத்தம்.

கெடிபெறவேயம்பலத்தி லாடுமீசன்
கேசவனுமகிழ்ந்தளித்த வையன்பாதம்
அடிபணியுமன்பாகண்மீ திண்யமுள்ளோன்
அடல்வாகுவல்லயமும் வாள்கடாறி
நெடியசிலைசுக்குமாந் தடியுமேந்தி
நிதிமிகுத்தபலபணிக ளலங்கரித்தே
வெடிபடவேயண்டரண்ட மதிரத்தாண்டி
வீரப்பதேவருமே வருகின்றாரே.

வீரப்பதேவன் வருகிறதரு-இ-ம்.

கொண்டிச்சிந்து.

ஆணிமுத்துவீரதுரைவந்தார் நல்ல
ஐயனாருரைக்குந்துய்யமொழிக்கு
மாணிக்கமகுடமுடிவேந்தர் வந்து
வரிசையுடனேபணியும் சரசகெம்பீரன்
ஆரகேயூரகடகம் நல்ல
அணிமுத்துமணிமாலைப் பணிஜொலிக்க
வீரமுள்ளசூரர்கள்வாட வெய்ய
மிண்டுசெய்யும்பேய்பூதங்கள் கண்டுகெதச
வரிச்சிலைகேடயம்வாளும் நல்ல
வளைதடிசக்கரம்பாரா வொளிருங்கட்டாரி
துரிதமுடன்விருதணிந்தே கையிற்
சுக்குமாந்தடியுடனே யுக்ரவீரன்
தட்டிஜல்லடங்கச்சைபூண்டு இந்தத்
தாரணியில்புகழ்பெற்றவீராதிவீரன

வெட்டிவேர்த்தம்பம்வீச காலில்
வெண்டைக்கொலிக்க மண்டலங்கொண்டாட

வீரப்பன்சொல் விருத்தம்.

தேவர்கள்பணிந்துபோற்றுந் தேவேந்திரன்மகிழுந்தேவி
ஆலயப்பதமடைந்த வயிராணிதன்னைக்காத்தே
பூவுலகத்தைக்காக்கும் புண்ணியநாதாபோற்றி
மேவிடவரவழைத்த விதமெனக்கருளுவீரே.

வசனம்.

பொன்னுலகவாசிகளாகிய தேவர்கோனாகவழங்குந் தேவேந்திரனது மனதுக்கினியவளாகிய அயிராணிபெண் மங்கையைக் காத்ததும் இவ்வுலகத்தையும் பாதுகாக்கவெழுந்தருளி யிருக்கும் புண்ணியமூர்த்தியே உனதுபாதமலர் போற்றிபோற்றி தேவரீர்சிறியேனைவருவித்தவிதந் திருவாய்மலர்ந்தருள வேண்டுஞ்சுவாமி.

ஐயனாரப்பன்சொல் விருத்தம்.

அருமைவீரப்பாயிந்த வகிலலோகத்துளன்பர்
தருபூசைக்கொண்டுவேங்குந் தாரணிதன்னைக்காக்க
வருகிறாளொருமின் தன்பேர் வாங்கியபூசைகொள்ளக்
குருகிநீயவளைவென்று கூறுவாய்பதிலெனக்கே.

வசனம்.

நெடியகடல்சூழ்ந்த இப்புவனமுழுதும் சம்மானிடரால்செய்யப்பட்ட பூசைகளையேற்று அன்னவர்களுக்கு யாதுக்குறைவின்றிப் பாதுகாத்துவருகிறோம் இப்போது கங்கையென்னும் பெயரைவகித்தவோர் கன்னிபானவள் தன்மகிமையை செலுத்திவருகின்றாளா.

வீரப்பன் கங்கையம்மனிடஞ்சமர்செய்யச் சொல்லுந்-தரு-இ-ம்.

பல்லவி.

அப்படிவருபவளாரிங்கே யவளை
யதஞ்செய்துவருகிறேன் பாருங்கள்

அநுபல்லவி.

எப்படிவருகுவா ளென்னையில்லாமலே
வெட்டிவிருதுண்டார்ப் வெட்டியெறிகுறேன்

சரணங்கள்.

ஆலைக்கரும்புபோலாட்டுவேன் அவளைக்
காலனுக்கிரையாகக்காட்டுவேன்

கோலாகாலித்திரிசூலியென்றனுமே
கொஞ்சத்தில்விடுவேனோ வஞ்சியான் படுவேனோ — அப்

புலியைப்பூனைகள்மிஞ்சுமோ வீட்டி
னெலியைக்கண்டதேனு மஞ்சுமோ
கெலிக்கவென்னைக்கொண்ட கெம்பீர மறிகிறேன்
கொலைதகொண்டுவலனைநான் கதறவேயடிக்கிறேன் — அப்

கெங்கையேயுந்தனை கண்டேனே யிப்போ
பங்கப்படுத்தவெண்ணங் கொண்டேனே
யெங்குங்கீர்த்திபெற்ற வெழிலையழிக்கிறேன்
யிப்போதேவெல்லுவேன் தப்பிந்நக்கொல்லுவாய் — அப்

இதுவுமது விருத்தம்.

கங்கையேயுன்னைப்போலக் கருத்தில்போராசைகொண்டே
ரெங்குநான்கண்டதில்லை யெப்படியிஞ்சிவந்தாய்
அங்கமுந்துடிதுடிக்க வதட்டியேவில்லைப்பூட்டி
பங்கமேபடுத்தவில்லிற் பாணத்தைச்சந்திப்பேனே.

வசனம்

ஆ ஆ ஓகங்கையே இக்கடல்சூழ்ந்த வுலகின்கண் உன்னைப் போல வீணாசைகொண்டு திரிபவர்களையெங்கும் நான்கண்டதில்லைமே லும் நாமேவல்லவியென்றும் நமக்குமிஞ்சினவர்களொருவருமில்லை யென்று மிருமாப்புகொண்டு மிஞ்சிவந்தாயன்றோ பளாபளா இதோக ணிமைக்கொட்டுவதற்குள்ளாக எனதுவில்லினிடமாக பாணங்களை ப்பூட்டி ஆகர்ணபரியந்தமிழுத்து உனதுடலத்தை சல்லடைக்கண் களாகச்செய்து பங்கப்படுத்துவேன் பாராய் கங்கையே.

பொதுவசனம்.

அகோ யெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வீரப்பன்கூறியஉக் ரவார்த்தையைக்கேட்ட கெங்கையம்மனவள் அதிககோபங் கொ ண்டவளாய் அடா துள்ளுகாளையே என்னடாதலைகீழாக விழுகிறு யென்று ஒருவருக்கொருவர் வாதமிடும் விதங்காண்க.

கெங்கையம்மனுக்கும் வீரப்பனுக்கும்தர்க்கம்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

துள்ளுகாளையென்றவர்க்கும் விள்ளவேயுலகில்வந்த
துடுக்கையடக்கவந்தேன் பாரடா
கள்ளத்தனமாகயிங்கே மெள்ளமெள்ளவந்தேனென்னின்
கருத்திலெண்ணுவதென்னபோடா

காரியமறிந்திடாமல் வீரியம்பேசாதேபோடா
நீரிலாததெய்வமுண்டோ மாரிலாதசெல்வமுண்டோ காரி

வீரப்பன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

அண்டருமடுங்கநோக்கு தண்டருக்குந்தண்டனென்று
வச்சமற்றுபேசவந்தேனடி
மண்டலத்திலென்னைவெல்ல வுண்டோவொருவராலாமோ
மார்க்கமறியாமற் செய்யுமடி
வையகமெல்லாமுண்டருளுந் துய்யமாதுமீசன்றந்த
வையனாருப்பவந்த செயவீரனென்றெண்ணாமல் அண்

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்,

மங்கைபாகனார்சடையிற் றங்குமந்தகெங்கையென்பேர்
மகிமைதனை நீயறிலதேதடா
எங்கும்நிறைந்தவள்நானே வுங்கள்வீரமறிவேனே
யெந்தனையெதிர்க்கும்வீரஞ்சூர
எப்படியுமுன்னைவெல்லுவேன் செப்புமிந்தவீரமேக
வற்பமாய்நினைக்கவேண்டா மொப்பிலாதசெல்விநானே மங்

வீரப்பன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

கோலாகலிதிரிசூலி மாலினிடகபாலியென்றே
சூரித்துச்சொல்வதான்மனதஞ்சுமோ
காலகாலிபரஞ்சோதி நீலிமகிடாசங்கரி
கங்கைநானென்றாலுன் வீரமிஞ்சுமோ
கற்றமொழிபேசவேண்டா முந்தம்குலநாயகி
மெத்தசவுரியங்கூறிச் செத்துநீமடியவேண்டாம் கோலா

கெங்கையம்மன்சொல் விருத்தம்.

எதிர்க்குவிறக்கமுற்று மெப்படிவீரஞ்செல்லும்
பதறிக்கைசமர்தொடுத்தால் பார்க்கலாமெனறதிரம்
வுதறிக்கைபோட்டங்கொள்ள வுன்னிடபடைகளெல்லாங்
கதறிக்கைசேர்ந்துவாடக் கணைகளைப்பொழிகுவேனே.

வசனம்.

ஆ ஆ அடாவீரனே உலகத்தில் தம்மை எதிர்த்தளரிகண் திறக்கங்கொண்டால் வீரம்வெளியாகுமோ அதுபோல்நாம் பதறிச் சமர்செய்யப் புகுந்தால் அப்போதுனது தீரமெரியவரும் ஆதலால்உனது சேனைகளைத் துங் கைசோர்ந்து மெய்சோர்ந்து வில் வேல்முதலிய ஆயுதங்களைவிட்டுக் கையுதறிக்கொண்டு ஓட்டம்பிடிககும்படியாகக் கணைகளைச்சோனைமாரிபோல் பொழிவேன்பாரடா

வீரப்பனுக்கும்-கெங்கையம்மனுக்கும்-தர்க்கம்.

தரு-கொண்டிச்சிந்து.

மீறிவுக்ரகோபமிகுந்தேன் கன்னையேநான்
வில்லைவளைத்தேயிதோ பல்லைகடித்தே
காரிழையுன்வீரியமழிய-நொடிக்குள்ளே
கண்டவர்திடுக்கிடவே கொண்டலிடிபோல்
காட்டிக்கணைமீட்டிவிடவே-வாட்டியுனை
கண்டவர்நகைத்திடவென் துண்டத்தனத்தால் மீறி

கெங்கையம்மன்சொல் சிந்து.

பாரெங்கும்நடுங்க-வில்வளைத்தென்
பாணங்களைத்தொடுக்க-நாணமடுக்க
வீரங்களடங்கிடவே-நொடிக்குள்ளே
விண்டலத்துதேவர்களுங்கண்டு துதிக்க
வெற்றிபெருஞ்சித்தமுடனே-ஈற்றிவந்த
மெத்தசேனைதத்தளிக்கவெற்றிவிடுவேன்-யாரே

வீரப்பன்சொல்-சிந்து.

விதிகுலக்கன்னியேகேளாய்-யிப்படிக்கொத்த
வீரியம்படைத்துவந்த காரியமேதோ
துதிபெறவந்தவளோ-உலகத்தில்
துண்டந்துண்டங்களாக மண்டைச்சிதற
தூரிக்கணைமீறிவிடவே-பாரிலுடல்
துண்டுதுண்டாயற்றுவிழப் பண்டுஜோடுவேன் விதி

கெங்கையம்மன்சொல்-சிந்து.

இடிபடாவீரப்பனே-நொடிக்குள்ளே
பெண்ணாதும்யெண்ணிமனங்குண்ணிவாடவே
தேடும்வகையறியாமல் வந்தெதிர்த்த
திண்டோளும்வல்லமையாவுங் கண்டுகளித்தேன்

தேடும்கைகூடாசயினி-ஓடிமறைந்தே
சேருமிடம்பாராடாநீ விறுகொள்வையோ-சடி

வீரப்பன்சொல் கந்தார்த்தம்.

கொடியகுலமும்வேலுடன்வில்லும்-நீதாங்கிப்
படியில்வரியஞ்செல்லவேவைத்திடும் பாவையே
கெடுதிகண்டமுமிமேர்ந்தியே-சினந்தலைகயோங்கி
முடுகியர்த்தனையடார்ந்து நான்வீசி
மோதுவேன்-தலைசிதறமடானேசானே
மோதிவிட்டவடிமீதுபட்டிடவே துமிறுவதேதுபோடிநீமோது

கெங்கையம்மல்சொல் கந்தார்த்தம்

பட்டிடவோங்கியதண்டமு முறிபடப்பாரதனைத்
தட்டி விலக்கியுன்விருதுகள் பொடிபடத்தாக்கிகணை
கொட்டிநொறுக்கியேமழைபோற் சொரிந்ததிசோருமுடன்
வட்டவில்வாங்கியே யெய்பவருங்கணை
வாடிநானே-மதிகலங்கி-யோடிநானே
வாடிநிற்கவேதேடிவெற்றிகள்-நீடிகெங்கையும்பாடிநிற்கவே

பொதுவிருத்தம்.

வீரனுமதிகலங்க வெருண்டுடனையனுருர்
தாரணிதத்தளிக்கத் தனிச்சிங்கம்போற்கெர்ச்சித்து
மாரனைப்போலவில்லும் வளைதடிகேதைவாளேந்தி
வாரணிகங்கைமுன்னே வருகிறதறிகுவீரே

ஐயனாப்பன்சொல் விருத்தம்.

கண்ணிகள்.

ஆலமுண்டகண்டார்ந்திகாலனுமதிகலங்க
வாக்ரமித்தேவாயுதங்கள்தாக்கினர்
அப்படிப்பட்டவடன்னையிப்போதேகொல்லுவேனென்று
வகட்டிப்பதியைவிட்டேநீங்கினர்
காலாந்தருத்திரனைப்போலவேகடுகடுத்து
கண்டவாதிடுக்கிட்டேங்கநாயனர்
கங்கையாளொருநொடியிற் பங்கப்படவேயடிக்க
கத்திகேடயங்களெடுத்தோடினர்
மண்டலத்தவர்கடஞ்சத் தண்டமதுகரத்தேந்தி
வச்சிரக்கவசம்பூண்டு நீங்கினர்
மட்டில்லாச்சினமிகுத்து வெட்டியெறிகுவேனென்று
மாறுபர்ட்டாய்வீரபாஷைகூறினர்

தண்டையொடுங்கிண்கிணியும் வண்டயங்கலகலென
தாண்டிமேயநடந்து வீரங்காட்டினர்
சக்கரம்வளைதடியு மிக்கவேயாயுதங்கொண்டு
தாரணியோரஞ்ச வில்லைப் பூட்டினர்.

ஐயனாரப்பன் கெங்கைக்குச்சொல் விருத்தம்.

சிவனுமேநகைபுரிந்து திரிபுரமெரித்தாற்போலும்
தவநிலைகலைத்தகாமதகனன்போற்றுவியுன்னை
அவனியோரறிந்துவாட வதோகதியாகச்செய்து
புவனத்திலுன்பேரில்லாப் போர்செய்யவந்தேன்பாராய்.

வசனம்.

ஆதிமறைகுலகன்னிகையே முன்னம்ஸ்ரீகைலாசபதியாகிய பரம சிவன்நகைசெய்து திரிபுரத்தை எரித்ததுபோலாம் தவநிலையைக் கலைக்கும்பொருட்டாய் புட்பபர்ண தொடுத்த காமனை நெற்றிக்கண்ணால் தகனஞ்செய்ததுபோலும் உன்னைத்தாவிப் படுத்துந் துன்பத்தைக்கண்ட விந்தபூமியோர்கள் வாட்டமுறும்படியாக வதோகதியாக்கி இப்புவனத்தில் வுனது பெயரில்லாமற்போக்கப் போர்செய்ய வந்தேன் பாராய் கங்கையே.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஐயனாரப்பனுரைத்தமொழியைக் கேட்ட கங்கைகூறுகின்ற விதங்காண்க.

கங்கைக்கும் ஐயனாரப்பனுக்கும் தர்க்கம்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

எரிப்பேனென்றனை யெதிர்த்துப்பேசியே
மெங்குலிறைந்திடுமையனே
விருப்பமாகவேபரிந்துரைத்திடுவேன்
வெகுண்டெழுந்திட்டமெய்யா
நெருப்பைகைவந்து மொர்ப்பதுமுண்டோ
நீயாயெதிர்த்தென்மேல்வருவதுநன்றோ
நிகரிலாதவேந்தன் வில்லையெடுப்பேன்
திருதிகெஞ்செறியுங்கணைகள் தொடுப்பேன் - எரி

ஐயனாரப்பன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

கணக்கில்லாதசரங்கள்வருகுது
கண்டுகொள்நீகெங்கையே
வணக்கமற்றுநீவந்தெதிர்த்திட்ட
வலுமையேதடிகங்கையே

துணிக்கவேயுனைச் சினமுமிகக்கொண்டேன்
தோகையுன்னிடவல்லமையைக்கண்டேன்
ஜோடுஜோடாக பாணமெடுத்தேன்
வாடியோடிடவாட்டிவிடுத்தேன் கணக்

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

ஆனைசேனையுமோடிவொளிக்கவேசொல்
அநேககபாணங்களிதோநான்பூட்டினேன்
நானிலங்கமஞ்சவெங்கணைமீறவும்
நாரியிற்றொடுத்திதோமீட்டியே
வானவர்கண்டுஜெயஜெயவெனக்கூறவும்
வாடிவந்தகனமனமதுதேரவும்
வடவைக்கனலதுபோல்வாளிகள்ஜொலித்து
மாண்புசேருபடைகள்வரடித்திகைத்திட-ஆனை

ஐயனாப்பன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

சற்றவித்தைதகள்பேசிவெதிர்த்திடுங்கங்கைக்
கன்னியேயுன்மனம்வாடவே
பற்றியேதிக்கணைவருகுதுவருகுது
பறித்துன்றன்சிரமதை வீழ்த்தவே
சற்றுகோத்திலுன்னுடலத்தைவாட்டியே
தையலேயுன்னையமனிடங்கூட்டியே
ஜடஜடமெனச்சுவிக் கரங்களும்வருகுது
குடுகுடமெய்யினிற் குருக்கள்பெருகுது-சற்ற

கெங்கையம்மன்சொல் விருத்தம்.

அரிஹரபுத்ரதேவா வநதனைச்செல்வியென்றும்
பரிவுளமனமிலாமற் பாலகிதனைவெதிர்த்த
நெறியலவென்றுகூறும் நீதியைக்கற்றிக்கிட்டி
வரிசிலைபெடுத்துத்தண்டவரு மபஜெயமுனக்கே

வசனம்.

ஸ்ரீகைலாசபதியாகிய பரமசிவனுக்கும் சொர்க்கமத்திய பாதாளமென்னு மூன்றுலோகத்தையும் உண்டருளிய திருமாலுக்கும்புத்திரனாகவிளங்கும் மகானுபாவனே கேள் உலகின்கண் பிராமணஸ்திரீகளைக் கொலைசெய்பவராகிய தன்னு சிறுபிள்ளைகளை எதிர்க்கலாகாதென்றும் நீதிமார்க்கமறிந்திருக்கும் சற்றேனும் இறக்கமில்லாமல்சமர் செய்யவந்தபடியால் அபஜெயமடைகுவீரய்யனே.

ஐயனாரப்பன்சொல் விருத்தம்.

வையகத்திற்பிறப்பவர்க்குகியானமேது
வஞ்சமிலானென்று மனவுறுதிகொண்டே
தையலரேயிதுவுனக்குத் தானேதோன்றச்
சராசரத்திலுற்றசெய ரறிகுவாயே
மெய்யழகியுஞஜெனன மெடுத்ததிரும்
விதிகுலத்தில்கெங்கையென்று விளம்புவாரும்
பொய்யுரையாச்சேதி யிஃதின்னதென்று
பிரியம்வைத்தென்மீதுவுரைசெய்குவாயே.

வசனம்.

சேனுங் கெங்கைநாயகியே பூலோகத்தில் ஜெனித்தமானிடர்களுக்குப் பூர்வக்கியானமில்லையென்பது யாவருக்குந்தெரிந்திருக்க நீ என்னுடைய வரலாறனைத்துங் கண்டறிந்தவள்போற் கூறியதெவ்வகை அதன்றியும் இச்சராசரங்கள் தோன்றுதலையும் அழிதலையும்பகுத்துச்சொல்லிய நீசத்தியநெறி யுடையவளென்றும் வஞ்சகியல்லவென்றும் முன்னமே பூரணமாகவறிந்திருக்கின்றேனாதலால் இனிமேலுனது பூர்வஜெனனமும் இந்தஜெனனத்தில் எவ்வூரில் எந்தபிராமணனால் வரப்பட்டதேவதையும் இல்லறத்தைவிட்டு நீங்கித்துறவாம்பெற்று எங்களுடன் போராடுந்தன்மையை விபரமாய்ச்சொல்லுமம்மா கன்னிகையே;

கெங்கையம்மன்சொல் அகவல்.

ஆரணத்தாலு மாகமத்தாலு
தேறுணைப்பொருளாய திகழுமப்பூதமாய்
ஓக்கியபொருளா முமாமயேசற்கும்
பர்க்குறும்பன்னகப் பாயலோர்தனக்குஞ்
சேயாய்ஜெனித்ததோர் செல்வமேதேண்மோ
மாயாப்பிறவி மயக்கத்திலேயும்
மாக்தர்கடம்மால் மாவிலமதனில்
ஆர்றியாதனு லகவிருட்செறிய
அக்தகன்றனக்கு வழிவிலாத்தொழிலாத்
சிக்தைதெளிக்தே சிவன்பாலுரைத்திட
வித்தகனென்னுமவ் விகலனமரித்தே
கற்றவார்சடையொளிர் கங்கையாமென்னை
மறைகுலப்பெண்ணாய் மாநிலத்துதித்தே
பொறையிலாமாக்தர்கள் புத்திகலக்கவும்
துஷ்டதேவதைகடன் றுன்பத்தைபோக்கவும்
இஷ்டரைப்பறித்தவர்க ளின்பதளிக்கவும்
எண்ணரும்வினையெலா மீடுறுவண்ணம்
புண்ணியப்பெருகிடப் பூமியிலுதித்தே
வடவேங்கடன்பால் வரமதைப்பெற்றே
திரமுடன் றாத்தித் திரும்புவவென்றே
விடைகொடுத்தனுப்ப வியன்கொளுமணியே
தடையிலாயானுஞ் சதுர்மறைக்குலத்தில்
வேதநாயகியெனு மேதகுபார்ப்பினி
பிள்ளையில்லாத பெருந்துயரதனுல்
வள்ளலேகங்கையை வணங்கிவந்தமையால்
பெண்ணுருவாகிப் பேசருங்கங்கையில்
அண்ணலேமிதக்க வரிவையுமெடுத்தே
நாயகன்பாற்சொல் நிலமுறுவேதியன்
றாயகன்னிரித் துலங்கியபண்பினுல்
கங்கையென்று நாமகரணமேயளித்து
பொங்கமாய்வளர்க்கப் புனிதனேனாளென்
ஐந்தாம்வயதி லய்ற்பெண்களுடன்
விந்தைசேர்நதியில் விளையாட்டுபூசலாய்
வந்தவரிணக்கியே மறைந்தனன்கங்கையில்
முந்தியபெண்களு முதியவர்பாற்சொல்

தேடியேகரையினிற் றிகைத்துநிற்கையில்
நாடியேநானுமென் நலமெலாம்பகர்ந்து
தேற்றியேயவரைச் சீர்மனைக்கனுப்பி
நாற்றிசையும்புகழ் நாரணன்வாழுந்
திருப்பதியானைச் சீரகத்திருத்தியே
விருப்பமாய்த்தவங்கள் வேணநாட்செய்ய
மண்ணனார்தமது சுருத்ததிகளித்தே
திண்ணமாவரங்கள் ஜெயமுகலளித்தார்
எத்தலைவநானு மினிப்புடனிருக்கையிற்
சாற்றுதற்கரிய சைவசுரமென்றும்
விட்டுணுசுரமெனும் விந்தைசேர்நோய்கள்
துட்டமாஎன்னைத் தொடர்ந்தெதிர்பொழிகையில்
வினைகளையடக்க மீறியேகாளியும்
எனைவந்தெதிர்க்கையி லிருவரும்வெகுண்டோ
அமர்செயப்புகுந்து வலையுஞ்செயித்தேன்
சமர்செயவந்த தானுமேயும்மைக்
கண்டவென்மனது களிப்படைந்தேனல்
அண்டர்கள்பணிய மையனேநாமும்
ஒருங்குசேர்ந்திருந்தே ரிற்றவெம்பிணிகளை
மருங்குறவிருந்து மாநிலமதனில்
காப்புகள்கட்டிக் கன்னியராக
மாப்பிள்ளைமார்களாய் மாவேடங்கொண்டு
வேப்பிலைபிடித்தே வீதிக்குவீதி
சாப்பாடுகொண்டு சம்பிரமமாகவே
கூழுவார்ப்பித்துங் கும்பங்களேற்றும்
தாழ்விலாப்பூசை தானுமேநடத்தியும்
அந்தணர்தமக்கு வன்னதானங்களும்
பலவகைகடோத்திப் பாவங்கடீர
நலமாய்திருவிழாக்க நடத்தியபின்னர்
பாவாடைபோட்டுப் பரிமளகந்தமும்
பூவாடைகளைப் பொற்கரத்தேந்தி
சகலவன்பர்களும் வாத்தியத்துடனே
வெகுவிதவாத்திய வேடிக்கையாக
கங்கையில்விடுத்துக் களித்தெந்தன்கிருபை
தங்கியமானிடர் சந்தோஷம்பெறக்
தீவினையகற்றிச் சென்மவீடேறப்

பாவங்கள்போக்கிப் பரகதிதாவே
கன்னியான்வந்தவென் கருத்தின்படிக்கு
என்னுடவந்தவர்க் கெழில்கொள்பூசைகளும்
தந்திடவந்தேன் தக்கதோர்நீங்கள்
எந்தனுக்குதவி யிருந்திடுவீரே.

ஐயனாப்பன்சொல் விருத்தம்.

அப்படியாவுன்பெருமை சொல்லக்கேட்டு
வானந்தசாகரத் துட்டோ யாதேனம்மா
யெப்படியுமுன் மகிமை யுலகிற்செல்லும
யிடரின்றிவுகவிலையுஞ் சந்தோஷித்தோ
டொப்பிலாநாயகியே வொன்றுகேண்மோ
உடன்பிறவியென்றே வுள்க்களித்தேன்
தப்பிலாவீரய்யன் சோபந்திரச்
சந்தோஷமாகவாக் தருருவாயோ

வசனம்.

கேளுமம்மா தங்கையே பெறுதற்கரிய உனதுமகிமையைக்கேட்ட நாங்களனைவருஞ் சந்தோஷமென்னுங் கடலில்மூழ்கி ஆனந்த பரவசரானோமாதலால் இனிமிக்கடல்சூழ்ந்தஉலகின் கண்யாதொரு இடருமின்றி யுனதுபெருமை சொல்லும்படியாய் நாங்களும் உதவி சென்றநாயகமே உனக்கோர்மனுவுண்டு அதுயாதெனில்குற்றமற்ற குழந்தையாகிய வீரப்பசோபந் தணிபும்படியாகச்செய்து சந்தோஷகரமாய் அவனுக்கு வேண்டியவரங்களை யருட்செய்வாயம்மா.

கெங்கையம்மன்சொல்-விருத்தம்.

அப்பனையெழுந்துவாடா வழகுங்கண்மணியேவாடா
ஒப்பிலாமகனேவாடா வுலகெலாந்துதிக்கவாடா
மெய்ப்புளவெண்ணீர்வேப்பு விசினேன்வினைகளோட
செப்பினேன்வீரமுத்துச் செல்வனேயெழுந்துவாடா

பொதுவிருத்தம்.

வெண்ணீறுபட்டவுடன் வினைகளோட
வெகுண்டெழும்பிக்கண் விழித்துக் கடுகடுத்தே
தண்ணீரைக்கவருகின்ற வலைப்போலத்
தாவியவனண்டபிண்ட மதிரத்தாண்டி

விண்ணோருமண்ணோ நத்திடுக்கிட்டேடக்க
வீரதண்டக்கரமுடனே யுக்ரங்கொண்டிப்
பெண்ணானகங்கையையான் வெல்வேனென்று
பேரிடிபோற்கொக்கரித்தே யெதிர்த்திட்டானே.

வசனம்

அதேதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஐயனாரப்பன் சொல்லிய வாய்மைக்கு மகிட்சிகொண்டவளாய்க் கங்கையம்மனானவள் தனதுகொடுங்கணைகளால் தேகமுழுதுந் துளைப்பட்டுச் சாவுக்குச்சரியானமூர்ச்சை யடைந்திருக்கும் வீரப்பன்மீது வெண்ணீற்றையும் வேப்பிலைப்பத்திரியும்வீசி ஒப்பிலாக்கற்பகம் போன்ற அப்பனே எழுந்துவருகவென்றுவாழ்த்தியமாத்திரத்தில் அவன்சோபமீங்கிக்கண்ணைவிழித்துப்பார்த்து தனக்கெதிரில் நிற்குங்கெங்கையம்மனைக்கண்டு அதிகோபங்கொண்டு கண்களில் நெருப்புப்பொறிகள்சிந்த நோக்கி அண்டபிண்டங்களதிரும்படியாய்த் தோள்கொட்டிச்சிங்கம்போல்கெற்சித்து வச்சிரதண்டத்தைப்பொத்த ஓர்கதையைக் கையிலேந்தி காகரவென்றுசுழற்றி இப்பெண்ணாகிய கங்கையைக்கொல்லுவேனென்று குருகியதைக்கண்டு கங்கையம்மனுக்கும் வீரப்பனுக்குந் தர்க்கநேரிடும் விதங்காண்க.

வீரப்பனுக்கும் கெங்கையம்மனுக்குந்தர்க்கம்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

வீரனே-யுலகின்மிக்க-தீரனுனே
வீரமாகவென்மேற் போர்செய்யமுடியாமல்
மாருமயக்கஞ்செய்த மந்திரசாலவாடி-வீர

கெங்கையம்மன் சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

தங்கம்நீயே ரணமுகசிங்கம்நீயே
கங்கையென்றேயென்னைக் கருத்திலுணராமல்
பொங்கிமீறிவந்தாற் பொறுக்கத்தானேவேண்டும்-தங்

வீரப்பன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

மிஞ்சவேண்டாம்யாதொன்றுகரும் அஞ்சவேண்டாம்
வஞ்சியவள்கெங்கை மாதாவென்றேயெண்ணி
தஞ்சமுமக்கென்றே சரணஞ்செய்துக்கொள்வேன்-மிஞ்ச

கெங்கையம்மன் சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்,

அச்சமேதுமணியுமென்றே-பிச்சையேது
அச்சமெனக்குண்டோ வடிப்பேதனையோட
வுச்சிதகெங்கையா ளோடாதேயெதிர்நில்லு-அச்ச

வீரப்பன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

வந்துபாரும்-என்றுவென்னை-சிந்தைதேறும்
மைந்தர்செய்பிழை மாதாயொப்பதென்றும்
அந்தவிதத்திற்கு நொர்ந்திடாமல்மீறி-வந்து

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

துள்ளவேண்டாம்-அதிகோரங்கொள்ளவேண்டாம்
தெள்ளுமணியேசொல்லைத் தள்ளிடக்கலாமோ
வள்ளற்செஞ்சடைதன்னி லுள்ளதெய்வம்நானே-துள்ள

வீரப்பன்சொல் விருத்தம்.

தந்தைசொன்மிக்கமந் திரமில்லையென்றவ்வை
அந்தசொல்லாலேகோப மடக்கியேமனதன்பாகி
வந்தேனுமனுதிவ்ய மலரடிசரணமம்மா
சிந்தையிலன்பாய்மைந்தன் செய்பிழைபொறுத்தாள்வாயே.

வசனம்.

ஓ அம்மணி தந்தைசொன்மிக்க மந்திரமில்லையென்று ஔவையார்கூறியிருக்கும் நீதிச்சொல்லினாலே கோபத்தை மாத்திவிட்டேன் ஆகலால்தாயகமாகிய உமது திவ்யசரணாரவிந்தங்களுக்கு வந்தனம் அடியேன்செய்த பிழையனைத்தும் பொறுத்துக் கொள்ளுவாய் அம்மணி.

மாரியம்மன்-கெங்கையம்மன்மீது-சமர்செய்யவரும்-பொ- விருத்தம்

பகலவன்போல் நவமணியாமகுடமின்னப்
　　பாரெங்குமவிலைமதியாய்ப் பணிகடம்மைத்
தகதகெனநிலவெறிக்க வலங்கரித்தே
　　தனிவில்வேல்வாளினுடன் சூலமேந்தி
மிகவதனிப்போற்றுதார் காலிமாலி
　　விண்ணவருங்கொண்டாட வரவமாடச்

ஜெகமுழுதுமபணிந்தேத்து மாரியம்மன்
சினமிருந்துங்கங்கைமுன்னே வருகின்றாளே.

இதுவுமது-தரு-இ-ம்.

பல்லவி.

வாசவன்மிகுத்துதி பேசுமப்ரகாசமதி
மகம்மாரியம்மன்வந்தாள் ஜெகப்ரகாச-மகம்

அநுபல்லவி.

மாசில்லாதவமணி மகுடம்பளபளென்ன
வஜ்ரமிழைத்தகொத்தள வோலையுமின்ன

சரணங்கள்.

கரகரபாலிமாலி யுரபூஷணிநீலி
கடகம்பளபளென்னவே
சரிகையுடுக்கைவாளுஞ் சூலங்கரத்திலேந்திச்
சோதிமிகுத்திடுதந்தமிலங்கிடவாதுதொடுத்திடுஞ்சூரர்கலங்கிட

எங்கும்நிறந்தரி சிங்கவாகனமேறி
யிணையில்லாத வீரர்சூழவே
மங்களாகரி நெடுமாலின்சகோதரி
மண்டலமெங்குமெழிற்றுதிபேச அண்டையில்மாதர்கவரிகள்வீச

தண்டைகொலுசுமவீரகண்டாமணியொலிக்க
சகலவாத்தியங்கள்முழங்கவே
தெண்டனிட்டருகினிற் கொண்டாடுபூதப்ரேதம்
தேசமிச்சிடுநற்கங்கையைமீறிமாசிலாதவதிபரிபுராமாரி வாச

மாரியம்மன்தனது காவல்காரிக்குச்சொல் விருத்தம்.

பார்த்தவர்மனங்களிக்கும் பண்புகாவலியேகேளாய்
போற்றவேயுலகமெங்கும் பூசைகொண்டிருக்குங்கீர்த்தி
மாற்றவேவந்தகெங்கை வல்லமைபறியவேண்டிக்
காத்தவராயன்றன்னைக் கடுகியேயழைத்துவாராய்

வசனம்.

வாராய்எனது ஏவற்கிசைந்த காவலியே இதுவரையில் இக்கடல்சூழ்ந்த உலகமெங்கு மென்னைக்கொண்டாடி பூஜித்துவருங்கீர்த்தியைப்பெற்றிருந்த எனதுபெருமையை மாற்றுவதற்காக வந்திருக்கும் கெங்கையினுடைய சவுரியத்தைபறியவேண்டி என்மைந்தனாகிய காத்தவராயனை யழைத்துவருவாய் பெண்ணே.

பொதுவிருத்தம்.

மண்டலமெலாம்வணங்கும் மாரியம்மன்
 மகிழ்ச்சியுடன்வழைத்த சேதிகேட்க
குண்டலங்கள்தளதளென்று செவியிலாடக்
 கொடியபிணிப்பேய் பூதங்கதறியோட
தண்டமுடன்சிலைவேலும் வாளுமேந்தித்
 தரணியுளோரெவர்களுமே பணிந்துபோற்றக்
கண்டவர்களதிசயிக்கக் காத்தமுத்து
 கலகலெனும்வொலியுடனே வருகின்றானே.

காத்தவராயன் வருகிறதரு-இ-ம்.

பல்லவி.

கருணைமொழியுமகம் மாரியம்மனளித்த
காத்தவராயன்வந்தான் உக்ரமிகுந்த-காத்த
தாரணியிலெங்குமோங்குஞ் சர்வபரிபூரணி [நல்ல
தாயுமெனத்தகுமாயன் சகோதரி-நேயமுடன்பணியுந் தூயர்தமக்கு

வட்டச்சிலையுடனே வடிவேற்சேடயமண
*வாடைச்சுகந்தம்வீசவே
எட்டுதிசைநடுங்க யீட்டிவல்லமைப்பூட்டி
எங்குமுளோருமஞ்சச் சவுகமதைமுழங்கிப
பொங்கமதாகவே தங்கச்சிரோன்மணி கரு

ஜல்லடமுங்கச்சையுந் தகுமிடையில்வரிந்து
தனிவிருதுகள்கூறிஜய
சொல்லுஞ்சொகுசுடனே பல்லைக்காட்டிநகைத்து
துன்னும்பலமணிமின்னதேகத்தில்
மன்னுமன்மதன்போல வுன்னிதக் கரு

காலுக்கிசைந்த வீரகண்டாமணியொலிக்க
கடகமபளபளென்னவே
மேலுக்கிசைந்தநல்ல வியன்கொளுந்தரமாட
மெத்தவேமாதர்கள் சித்தமயங்கிட
வுத்தமவன்பர்கள் பத்திபுரிந்திடக் கரு

காத்தவராயன்சொல் விருத்தம்.

திரிசூலதூலிகாலி ஜெகமெலாநிறைந்தநீலி
அரிசகோதரியேயுந்த னரவிந்தமலர்த்தாள்போற்றி

பிரியமாளன்னைக்காக்கும் புண்ணியவதியென்றாயே
பரிவுடனெனையழைத்த பான்மையையருட்செய்வாயே.

வசனம்.

ஆதிமத்யாந்த ரகிதனாகவிளங்கும் மாயன்சகோதரி மகம்மாரி திரிசூலி கோலாகாலி நீலிகபாலி நிறைந்தபஞ்சாட்சரி உனதுஉபய பாதாம்புயங்களுக்கு அநேகவந்தனம் அம்மணி அடியேனைப்பரிவோ டழைத்த காரணத்தைப் பகர்ந்தருளவேண்டுந் தாயே.

மாரியம்மன்சொல் விருத்தம்.

கட்டழகுடையவேந்தன் காத்தவராயவாழி
மட்டிலாவுலகிற்கொண்ட வண்மைசேர்த்திடப்போகப்
பட்டணந்தனிலேவந்த பார்ப்பாரக்கன்னிதன்னை
அட்டியில்லாமல்வெற்றி யடைந்துநீவருகுவாயே

வசனம்.

வாருமப்பா பெறுதற்கரியமைந்தனே இதுபரியந்தம்நமதுபெ யரைச்சொல்லி இவ்வுலகமெங்கும் நெறியுண்டாகவாய்முடிப் பூசை யேற்றுவந்த பெருமையைப் போக்கும்படியாய் இப்போது பிராமண குலத்திற்றோன்றி கெங்கையெனப்பெயர்பூண்ட ஓர்கன்னியானவள் வந்திருப்பதால் நீசென்று அவளைசெயித்துவரக் கடவாய்அப்பனே.

பொது வசனம்.

அகோஇதப்படியென்றால் இந்தப்பிரகாரம் மாரியம்மனானவள் தனதுகுமாரனாகிய காத்தவராயனுக்கு கெங்கையைப் பொருந்திச் சமர்செயித்து வரக்கடவையென்று விடைதந்ததுபோல அக்காத்த வன் மிகவுங்கோபங்கொண்டு வருகையில் அவனைக்கண்டகங்கைதற் கஞ்செய்யும் விதங்காண்க.

காத்தவராயனுக்கும்-கங்கைக்கும்-தர்க்கம்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

வாரும்வாரும்-கெங்கையே-என்னுடன்வீரம்
பாரும்பாரும்கெங்கையே
சீரும்புகழ்படைத்த மாரியம்மனளித்த
சேயன்காத்தமுத்தென்றால் வாய்மூடிமுலகெங்கும்
செல்லுமேயிதோ வில்லைவளைத்தேன்
நல்லதுன்றனைக் கொல்லநினைத்தேன் வாரும்

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

கேளுக்கேளுக் தண்டனே - நல்லதுசற்றே
தாளுஞ்செய்கிறேன் தெண்டனே
கோளறிமூன்யானைக்குட்டியைப்போலெகிர்த்துக்
குதிக்கின்றுயேதடா மகிந்துப்பாராமலே
குத்தியிருக்கவே பற்றினேன்சூலம்
அந்தனைபெச்சிடு முந்தமியெனக் கேளு

காத்தவராயன்சொல் தரு-இ-ம்.

கண்ணிகள்.

என்னபெருமைபேசுருய்-பரமன்மெச்சுங்
கன்னிகாளென்றேவிசுருய்
சின்னவனென்றேயெண்ணி யென்னைநீமதியாமற்
சிந்தை துணிந்துவந்தா யெந்தபலத்தினுலோ
சினமுற்றதாலெந்தன் தறுவில்நாணேற்றி
மனதில்நாணவே கணைவாளிகளெய்குவேன் என்

கெங்கையம்மன்சொல்-தரு-இ-ம்.

கண்ணிகள்.

ஏதடாசிறுபையனே இந்தனைகோலம்
வாதடாவருகையிலே
மாதடாயெனக்கென்னவல்லமையறிந்தாமோ
மாற்றியுந்தனைக்குடி யேற்றுவனேமபுரி
வந்துயெனதுகையால் ஞெந்திடவேவேண்டாம்
வுந்தனைவெல்வதற் கெந்தனுக்கரிதோசொல்

காத்தவராயன்சொல் விருத்தம்.

வீண்மொழிபேசவேண்டாம் மெல்லியேபெண்பிள்ளைக்கு
சாண்பிள்ளையென்றாலந்த வாண்பிள்ளை தனம்வராது
காண்பைநீஉனதுவீரங் கைக்கினையொருவருண்டோ
பூண்பணிசிரத்தைக்கொய்ய பூட்டினேன்பாணம்பாராய்.

வசனம்.

ஆ ஆ பளாபளா நல்லது கெட்டிக்காரிதான் ஓகங்கையேநீஎன் முன்னேநின்று வீணனகாரியங்களைப் பேசவேண்டாம்சாண்பிள்ளை யென்றாலும் ·ஆண்பிள்ளையினுடையதீரம் பெண்பிள்ளைக்குண்டாகா

தென்னும்பழமொழி யறியாயோ அதுபோல் எனதுவல்லமையினா ல் உனதுசிரம்வேறு காம்வேறாகக் கண்டிக்கும்படியாய் பாணப்ர யோகஞ் செய்கிறேன்பார்.

காத்தவராயனுக்கும்-கங்கையம்மனுக்கும்-தர்க்கம்-தரு.

பாணம்பூட்டினேன் பிறைமுகபாணம்பூட்டினேன்
பாணம்பூட்டிபாக்கடிக்குஞ்செய்தி
பண்ணவாதிமண்ணோருங்கண்டேகித்
தானுவுனக்குத்துணைவாதபோதினுந்
தத்தளிக்கச்செய்வேனுக்ரவில்வளைத்தே பாண

கெங்கையம்மன்சொல் தரு.

கண்ணிகள்.

வீரமேதடாவுனக்கிந்த-வீரமேதடா
வீரமேதடாவெறுங்கையனேபோய்யனே
வெற்றிகொள்ளவுன்னாலெப்படி முடியும்
ஆரவாரமிட்டேயறியாமற்செய்குறாய்
ஆர்துணைவந்தாலும் பாருனைக்கொல்லுவேன் வீர

காத்தவராயன்சொல் தரு.

கண்ணிகள்.

கொல்லத்துணிந்தேன்பார் சணத்தில்கொல்லத்துணிந்தேன்
கொல்லத்துணிந்தேன் விதிக்குலகோதையே
கோத்திரத்திலுனை வீரங்கள்பேதையே
பல்லைக்காட்டியுனை கெஞ்சவேசெய்குவேன்
பருதிபோல்வாளியு மேகமாய்ப்பெய்குவேன்

கெங்கையம்மன்சொல் தரு

கண்ணிகள்.

ஏதுகாலமோவுனக்கிது யேதுகாலமோ
ஏதுகாலமோநீவதைப்படவென்னுக்
எரிக்கணையென்றூர் பொசுக்குவேன்பாரடா
நாதன்சடையிருப்பதறியாயோ
நச்சுநச்சென்றேநவிலாதடாவேபா ஏது

காத்தவராயன்சொல் தரு.

கண்ணிகள்.

என்னகாலமோ மடிக்கிடவென்னகாலமோ
என்னகாலமோதென்னேடெதிரிட்டுப்பேசுறாய்

பிறப்பவளாதலா லேகோதைவீசுறாய்
சின்னவனென் றவமதித்தாயோ நீயென்னைச்
சேதிக்குறேனிதோ பேதிக்குறேன்பாராய்

கெங்கையம்மன்சொல் விருத்தம்.

சிங்கவாகினிமாரியம்மன்றந்தச்
செல்வனெனுங்காத்தமுத்தே சொல்லக்கேளாய்
கங்குன்மதிகனைவெல்லக் கண்டதுண்டோ
கதிரவனைப்பனிக்கூட்ட மெதிர்ப்பதுண்டோ
செங்கருடன்றனையரவம் வெல்வதுண்டோ
ஜெகமதனிலென்னை வெல்லுவாருண்டோ
மங்களமாயெனையொருதாயெனவெண்ணி
மலரடியைப்பணிந்து நலம்பெறுகுவாயே.

வசனம்:

ஆ ஆ உலகின்கண் சிங்கவாகனத்தில்ஆரோகணித்திலகாநின்ற மாரியம்மன்றந்த காத்தவராயனே சங்கிராமணத்தின்முன் இருட் கூட்டம்பொருந்துமா ஆயிரங்கிரணத்தோடுங்கூடிய ஆதித்தனென் னுஞ்சூரியனை பனிக்கூட்டம்வெல்லுமா கிருமாலுக்கினியவனுகிய செங்கருடனைச் செவியென்னும்பாம்பு எதிற்குமா அதுபோல இந்த பூமண்டலத்தில் என்னைவெல்லத்தக்க வீரியமுண்டோ ஆதலால் உனதுதன்மதியை விடுத்தென்னை தாயகம்போல்உன்னி எனதுபாத பத்மங்களைப் பணிந்தால் நன்மையைப்பெறுவாயடா காத்தமுத்தே

காத்தவராயனுக்கும்-கங்கையம்மனுக்கும்-தாக்கம்-தரு.

கண்ணிகள்.

வீராதிவீரனேன் கங்கையேயுன்னை
மீறிப்பறக்கடிப்பேனே
பாராமதியிலாமற் பாதம்பணியச்சொன்னாய்
பற்றுமிந்தகணைகளாலே வெற்றிகொள்வேனிமைப்போதில்

கெங்கையம்மன்சொல் தரு.

கண்ணிகள்.

அஞ்சாதேகெங்கைநானே ஆங்காரனுன்னைப்
பஞ்சாய்ப்பறக்கடிப்பேனே
வஞ்சியெந்தன்கைக்கணைக்கு மிஞ்சுஞ்சுரர்களுமுண்டோ
வாட்டிக்கணைபூட்டியிதோ வோட்டுவேனமன்பதிக்கு அஞ்

காத்தவராயன்சொல்-தரு.

கண்ணிகள்.

சக்குமாந்தடியெடுப்பேன் கங்கையேயுன்னைச்
செக்கைச்செக்கையாயடிப்பேன்
திக்குவேறேயில்லையென் மிக்கபுகழ்கொண்டுவந்தாய்
தேசமெங்குமபேசத்துதி வீசியேபறக்கடிப்பேன்

கெங்கையம்மன்சொல்-தரு.

கண்ணிகள்.

கண்டங்கரத்திலெடுப்பேன் சரகரவென்றே
நின்றுசுழட்டியேவிடுப்பேன்
மண்டலமும்விண்டலமுங்கண்டேநடுங்க
வாடிப்பயந்தோடிடவே நாடியேவுக்கிரங்கொண்டு கண்ட

காத்தவராயன்சொல்கந்தார்த்தம்.

சக்கரஞ்சூலம்வேலுந் தனிக்கதைபிண்டிபாலம்
மிக்கவாயுதங்களோடும் வேண்டியவிருதுபூண்டும்
கைக்கிணையில்லையென்று கருவிக்குங்கங்கையாளே
உக்கிரகோபங்கொண்டு
ஓங்கினேனே ஆயுதங்கையிற்றாங்கினேனே
தேங்கித்தேங்கியுந்தன் சிந்தைதிகைத்திட
வாங்கிவாங்கிக்கணை வந்துமிகுத்திட ஓங்கி

கெங்கையம்மன்சொல் கந்தார்த்தம்

வையகம்போற்றுகின்ற மகம்மாரிமைந்தனென்றே
ஐயமில்லாமலென்னோ டமர்செயுமகனேகேளாய்
கையினலாகுமோடா கடிந்தமர்புரியவந்தாய்
செய்பவேவேணதுகமம்
தீரமுண்டுஉந்தனைவெல்ல வீரமுண்டு
காரியமறியாமற் காத்தவராயனே
மாரியின்சுதனென்றே மனமில்லையுனைக்கொல்ல தீர

காத்தவராயன்சொல் கந்தரார்த்தம்.

நலமிகுமொழியுரைத்த நங்கைகேயகங்கையாளே
வலதிலாவின்பமென்று மனதிலேக்கண்டுக்கொண்டேன்
பலபலகணைகள்சிந்திப் பாரெலாமதிசயிக்க

சலமதுமிகநீகொள்ளச்
ஜாடுவனே இரண்டு துண்டாய் போடுவேனே
நாடுநகரமெல்லாம் நற்றுதிகொண்டநீ
வாடும்படியிங்கே வந்தகப்பட்டாயே

கெங்கையம்மன்சொல்-கந்தார்த்தம்.

கன்னியென்றெனிதாய்ச்சொன்ன காத்தவராயாகேண்மோ
உன்னையுமறிவேனுன்ற னுலகந்தாயானமாரி
தன்னையுமறிவேனெந்தன் சங்கதியறியாய்நீயும்
என்னிடமகிமைகாண
எண்ணினை மணிமந்தரம்பண்ணினேனே
வெண்ணீற்றைவீசிட வீரமொடுக்கியே
குண்ணிவாடநீயுங் கொஞ்சம்பிரயோகித்தேன் எண்ணி

பொதுவிருத்தம்.

கங்கையேவியமாயத்தாற் காத்தவராயன்சோர
அங்கமுந்துடிதுடித்தே யாக்ரமித்தெழுந்துசீறி
சிங்கவாகனத்திலேறி திரிசூலப்படைகளேந்தி
மங்கையாங்கங்கைமுன் மாரிவந்தெதிர்த்திட்டாளே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் கங்கையம்மனானவள் தன்னுடனமர்செய்துவந்த காத்தவராயனுக்கு யெத்தனையோவிதநன்மைசொல்லியும் அவைகளை அசட்டைசெய்துமீறுவதைக்கண்டு கோபங்கொண்டவளாய்த் தனக்குகைவசப்பட்டிருந்த மணிமந்தரசித்துகளிற் சிலவற்றையவன்மேற் றூண்டியபோது அசனுலமெய்சோர்ந்துசாவுக்குச் சரியானமூர்ச்சைகொண்டு நிலத்தின்மேற் சாயஅதைக்கண்ட அவன் அன்னையாகியமகம்மாரிதுடிதுடித்துக்கோபங்கொண்டு சூலப்படைமுதலிய வாயுதங்களேந்தி அண்டம்நடுங்கக்கெற்சனைசெய்து கங்கைக்குமுன்வந்துநின்று போர்புரியும் விதங்காண்க.

மாரியம்மனுக்கும்-கெங்கையம்மனுக்கும்-தர்க்கம் தரு.

கண்ணிகள்.

ஆடிநீவாடி கங்கையேயிந்த
வமர்களந்தனில்மிகச் சமர்புரிந்திடுபவள்
ஆரடியுலகெங்குந் தீரஞ்செலுத்திடவே
ஆசைகொண்டுவந்தேனடி உன்னோநானும்

அறிவேனறிவேனடி கெருவமிகமிஞ்சாதே
கேசக்கொண்டு வந்தேனடி
ஆட்டியேபம்பரம்போலே வாட்டியேயிமைப்பொழுதில்
காட்டியேனனதுவீர மோட்டிவிடுவேனேயுன்னை ஆடி

கெங்கையம்மன்சொல் தரு.

கண்ணிகள்.

மறைக்குலகன்னிகானடி-நல்ல
வருமைமிகுத்தேயிவ் வுலகோர்சொல்கறிய-மறை
இறையவனார்மகிழுந் தரைபுகழ்கங்கைநானே
யின்பமுற்றுவந்தேனடி தீரத்துடனே
யெண்ணியெண்ணியே மனதிலெந்தனையறிந்திடாமல்
தெம்புகொண்டேவந்தேனடி
முந்திவந்தசுதனைப்போல் நொந்துநீமயங்கிடவே
யெந்தனையெதிர்த்துளம் வெந்துயேன் வீணாகப்போராய்மறை

மாரியம்மன்சொல் தரு.

கண்ணிகள்.

சீதனார்தங்கைகானடி திரைசூழ்ந்த
ஜெகமெலாம்கொடிபெற மிகத்துதிபாவியசீத
வேதியன்குலந்தன்னில் மாதேநீபிறந்தவள்
வீரர்களுந்தனுக்கேதடி மிருவகோர
வெகுவிதவினையுடனே விடன்கொள்மகிமைகாட்டுந்
தீரமுந்தனுக்கேதடி
மீறியேவருங்கணைகள் மாரியேமுடுக்கி
பாரில்விழுந்திடவுன்னைக் கூறுகூறாகவேசெய்வேன் சீதா

கெங்கையம்மன்சொல் தரு.

கண்ணிகள்.

எல்லாமறிந்தநானடி யிகந்தனிலே
யென்னைவந்தெதிர்த்தவர்க் கிருக்குமனேறிடங்கள் எல்
வல்லோர்களும்வணங்க நல்லோருந்துதிக்க
வயங்குங்கீர்த்திபெறவந்தேன் இப்புவிமீது
வாசமாகவேஎன்னுடன் நேசமதுசெய்யவந்தவள்
தளருதவாய்மைதந்தேனே
மண்டிச்சமர்செய்குவோரைத் தண்டிக்கின்றவிதமுண்டு
அண்டக்கோபமுடனே கொண்டேனேதறுகாத்தில் எல்

மாரியம்மன்சொல் விருத்தம்.

பாரில்வாழ்மாந்தராதி பண்புளதேவரெல்லாம்
மாரியேதெய்வமென்று மகிமைசீபறிக்கிடாமல்
வீரியஞ்செலுத்தவந்த விதிகுலப்பெண்ணேயுன்னைக்
கூறியவாளினாலே கொல்லுவேன்வந்துபாராய்

வசனம்.

ஆ ஆ அடிமறைகுலத்திலுதித்த கெங்கையே நெடியகடல்சூழ்ந்த இப்பூமியின்கண்ணுள்ள மானிடர்முதற்றேவரெல்லாம்மாரியே தெய்வமென்று புகழும்எனதுமகிமையை நீயோசியாமல் ஏதோவுனது அரியாத்தனத்தால் வீரியங்காட்டஎண்ணமுற்றாயாதலால் இதோ எனதுபிரகாசம்பொருந்திக் கூரோடுங்கூடியிருக்குஞ் சந்திராயுதத்தினால் உன்னைக்கொல்லுவேன் வீந்துபாரடி கங்கையே.

மாரியம்மன்சொல்-ஓரடி-தரு- இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

முத்துமாரிநானேசொல்லும்
முதண்டங்களுந்தீதண்டாதொளிர்
கோதண்டன்குலவுஞ் சோதரியெனும் முத்து

எத்தலமும்புகழுமெனக்கிணைசொல்லப்போமோ
வெழிற்கங்கையேநீயென்னையெளிதில்வெல்லவுமாமோ
பித்துகொண்டறிபாமற பிடித்தாய்கரத்தில்வில்லே
பேசாமலோடிவாயேற் பின்வருமோவித்தொல்லே
பெலங்கொண்டபிறைமுகச்சுணையதனாலே
நலங்கண்டவந்த னல்லுடமுமண்மேலே
பிண்டுவிழுந்தேயிலங்க வண்டர்கள்கண்ணீர்கலங்க
அண்டமனைத்துங்குலுங்க வெண்டிசையென்சீர்துலங்க
பேதைநீவேதனையகி விழுந்தழுஞ்
சேதிகேட்டியாவருந் தியாவருமடிதொழும் முத்து

வரிச்சிலைதொடுத்தேனே கங்கையேவெய்ய
வாளிகள்விடுத்தேனே
நரித்திரள்களுடனே நாயும்பேய்பூதங்களும்
கன்றாயுனைப்பொசித்தே நடிக்குஞ்சுக்கிதங்களும்
இருச்செவியிலுங்கேட்டேயிரும்புவியெங்குங்கோலம்
வெறிலுநவேதிரிவேனுனக்கிந்தகாலம்

கெங்கையம்மன்சொல்-ஓரடித்-தரு-இ-ம்.

பல்லவி.

கங்கைநானென்றேபாரடி-ககனர்பணி
நங்கைநானென்றேதோடி

சங்கரனார்சடையிற் றங்கும்படியெனக்கு
சந்ததமுமுண்டெனத் தாணிகொளுமுனக்கு
அங்கமேதிசுதனு லருப்புண்டதிருமுடி
ஆரென்றெண்ணினாய் நல்லதெனவெதிர்வாடி

அறங்கொண்டுயிர்ந்த வகிலத்துள்ளவர்வினை
திறங்கொண்டுயிர்ந்த வகிலத்துள்ளவர்வினை

அற்பமாகவேயெண்ணி விற்பிடித்தாயெதிர்நண்ணி
ஆயன்வந்தாலுந்துணையால் நேயஞ்செய்வேனேயிணையாய்
அந்தரக்காத்தாடிபோலே முந்துமெந்தன்கணையாலே
ஆவியலைந்திடச்செய்யும் மூவிலைச்சூலங்களெய்யும் கங்

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஸ்ரீகைலாசபதியாகிய சந்திரசடாதாமூர்த்தியினது சடாடவியிலிலங்கும் கெங்கையம்மனும் ஸ்ரீவைகுந்தநாதனென்னும மாயவன்சகோதரியாகிய மாரியம்மனும லோகாலோகங்களெல்லாம் நடுங்குமபடியாய்ச் செய்யுஞ் சமரைக்கண்டு அச்சமுற்றவராய் அவளைசமாதானஞ்செய்யும் பொருட்டு திருமால் வருகிறவிதங்காண்க.

இதுவுமது விருத்தம்.

அடவுளமாரியென்னு மருமைசேர்கெங்கையென்னுந்
திடமுளயிருவருந்தான் செய்சமர்நலமோவென்று
கடுகியேதேவர்சூழக் கரத்திற்சங்காழியேந்தி
வடமலைவெங்கடேசன் வந்தவர்க்குரைசெய்வாரே.

திருமால்-சொல்லுந்தரு-இ-ம்.

பல்லவி.

தங்கையேமாமறைக் கங்கையேநீங்கள்
சமர்செய்யலாகுமோ நில்லுங்கள்.

அநுபல்லவி.

சங்கப்படைகளெல்லா மென்கையிற்றாருங்கள்
சினம்விடுத்தேயன்பாக மனம்வைத்துவாருங்கள் தங்

மங்களம்.

இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

செங்காபவானியென்னுங் கருணைகடாக்ஷிக்கு
மங்களம் ஜெயமங்களம்
சங்கரனாருளுஞ் சதிர்கொளீங்கரனுக்கு
யங்களம் ஜெயமங்களம்
சோமனைத்தரித்தொளிர சுகுணரஞ்சிதனுக்கு
மங்களம் ஜெயமங்களம்
வமர்முற்றிலகும் வரைராஜபுதல்விக்கு
மங்களம் ஜெயமங்களம்
துன்னுமயில்மேல்வருஞ் சுப்பிரமணியற்கு
மங்களம் ஜெயமங்களம்
மன்னுபவள்ளி தெய்வானையிருவருக்கு
மங்களம் ஜெயமங்களம்
வண்ணபரைகல்யாணி வடவேங்கடத்தாருக்கு
மங்களம் ஜெயமங்களம்
தண்ணுலவுக்குழற் றையலலமேலுக்கு
மங்களம் ஜெயமங்களம்
மாமறைகடமக்கு மன்னும்புவியினோர்க்கு
மங்களம் ஜெயமங்களம்
நேயமு[illegible]க்கை நீள்புகழ்படித்தோர்க்கும்
மங்களம் ஜெயமங்களம்.

மங்களம்முற்றிற்று.

17392